பக்கங்கள் பத்து
விலை ரூபா 5-00 Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

உங்கள் கண்களைப் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.
எரிக் கணேஷ்
564, 566, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.
(சி-2751)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 3 சனிக்கிழமை (20-10-2001) தொலைபேசி: 3378 ஒலி 313

## மலையகத் தமிழ்க் கட்சிகள் ஓரணியில்;
# எம். எஸ். செல்லச்சாமி
# மீண்டும் இ. தொ. காவில்
## ஐ. தே. கட்சியுடன் இணைந்து போட்டி

(விசேட நிருபர்)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்ற அக்கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான எம். எஸ். செல்லச்சாமி மீண்டும் நேற்று ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் சேர்ந்து கொண்டார்.

மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பெ. சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி ஏற்கனவே இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸுடன் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மலையக மக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் இம்மூன்று கட்சிகளும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடவும் தீர்மானித்துள்ளன.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானுடன் ஏற்பட்ட கருத்துமுரண்பாடு காரணமாக இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸில்இருந்து கடந்த ஏழுவருடங்களுக்கு முன்வெளியேறிய எம் எஸ் செல்லச்சாமி தேசியதொழிலாளர் காங்கிரசை தாபித்து அதன்தலைவராக இருந்ததுடன் கடந்ததேர்தல்களில் போட்டியிட்டும் வந்தார்.

மீண்டும் இலங்கைதொழிலாளர் காங்கிரஸ் எம். எஸ் செல்லச்சாமி இணைந்துள்ளதால் அவருக்குகாங்கிரஸின் பிரதித்தலைவர் பதவிவழங்கப்பட்டுள்ளது-

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசில் இணைந்த பின் எம். எஸ். செல்லச்சாமி கருத்துத் தெரிவிக்கையில் மலையகத் தமிழ்த் தலைவர்கள் ஒன்றிணைந்திருப்பதினால் மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப் படுவதுடன் பலம் பொருந்தியதுமாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

(10 ம் பக்கம் பார்க்க)

## இலங்கையிலுள்ள அமெரிக்க, அவுஸ்ரேலிய தூதரகங்களுக்கு "அந்திராக்ஸ்"

(அமெரிக்கா)

கொழும்பிலுள்ள அமெரிக்க, அவுஸ்ரேலிய தூதரங்களுக்கு ''அந்திராக்ஸ்'' எனும் நச்சுத்தூள்கள் அடங்கிய கடிதம் கிடைத்துள்ளதாக கறுவாத் தோட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கறுவாத்தோட்டப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ. சோமசிறி கருத்துத் தெரிவிக்கையில்;

(10ஆம் பக்கம் பார்க்க)

## புளொட்டை இணைக்க முயற்சி

[வவுனியா]

நான்கு கட்சிகளின் கூட்டு முன்னணியில் புளொட் அமைப்பையும் சேர்த்துக் கொள்வதற்கு கொழும்பில் உள்ள தமிழ்வர்த்தக சமூகம் ஒன்று தீவிர முயற்சி எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வவுனியாவில் நான்கு கட்சிக் கூட்டமைப்பின் தேர்தல் வேலைகளைக் கவனிப்பதற்கு தேர்தல் காரியாலயம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. (வ)

## அமெரிக்கத் தாக்குதலை கண்டித்து ஆர்ப்பாட்டம்
### வவுனியா முஸ்லிம்கள் நடத்தினர்

(வவுனியா)

ஆப்கான் மீது அமெரிக்கா நடத்திவரும் மிலேச்சத்தனமான விமானக் குண்டுத்தாக்குதலைக் கண்டித்துவவுனியா முஸ்லிம்களால் மாபெரும் ஊர்வலம் ஒன்றுநேற்று நடத்தப்பட்டது.

நேற்று நண்பகல் ஆரம்பமான இக் கண்டனஊர்வலத்தில் அமெரிக்கா, பிரிட்டன் நாடுகளை கண்டித்து எழுதப்பட்ட சுலோகங்களும் எடுத்துச் செல்லப்பட்டன. ஊர்வலத்தில் சென்றவர்களால் வவுனியா அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

ஊர்வலத்தின் இறுதியில் அமெரிக்க அதிபர் ஜோர்ச் டபிள்யூ புஷ், பிரிட்டிஷ் பிரதமர் டொனிபிளேயர் ஆகியோரது கொடும்பாவிகளும் அந்நாட்டுதேசியக் கொடியும் எரிக்கப்பட்டன. (ந-4)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

திருகோணமலை பள்ளி தோட்டப்பகுதியில் கடந்த திங்களன்று படையினருடன் ஏற்பட்டமோதலில்

கடற்கரும்புலி கப்டன் அன்புக்கினியன் வீமன்(நமசிவாயம் சிவரூபன் யாழ்மாவட்டம்)

2ம்லெப்-ஏணச் செல்வன் (செல்வகணபதிப்பிள்ளை ரமேஷ் கொழும்பு)

2ம்லெப்-வேந்தன் செல்லத்துரை பாலகுமார் யாழ்ப்பாணம்] ஆகியபோராளிகளும்

## யானைச் சின்னத்தில் சிறி.மு.கா. போட்டி

[வவுனியா]

வன்னிமாவட்டத்தில் ஐக்கியதேசியக்கட்சியின் யானை சின்னத்தில் சிறிலங்காமுஸ்லிம்காங்கிரஸ் போட்டியிட முடிவு செய்திருப்பதால் வன்னிமாவட்ட ஐக்கியதேசியக்கட்சி ஆதரவாளர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்

இதேவேளை முஸ்லிம்காங்கிரசுடன் கூட்டுஇல்லாமல் ஐக்கியதேசியக்கட்சி போட்டியிடுமானால் சிவநாதன் கிஷோர் கட்சியின் சார்பில் போட்டியிடுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது [வ]

வன்னிமாவட்டத்தில்

## வன்னியில் நான்கு தமிழ்க் கட்சிகளின்

# வன்னியில் நான்கு தமிழ்க் கட்சிகளின் வேட்பாளர் பட்டியல் தயார்!

(வவுனியா)

வன்னி மாவட்டத்தில் தேர்தல் களத்தில் குதிக்கவுள்ள நான்கு கட்சிகளின் கூட்டணி தலைவர்கள் கட்சிகளின் சார்பில் போட்டியிடவுள்ள அபேட்சகர்களின் பெயர்விபரங்களைப் பூர்த்தி செய்துள்ளன.

வவுனியாவில்நேற்றுக்கூடிய நான்கு கட்சிக் கூட்டணித் தலைவர்களே தேர்தலில் போட்டியிடவுள்ள அபேட்சகர்களின் பட்டியலைப் பூர்த்தி செய்துள்ளனர்.

ரெலோவின் சார்பில் முதன்மை வேட்பாளராக செல்வம் அடைக்கல நாதன் எஸ். நோகாதரலிங்கம், இரா ஜபுவனேஸ்வரன், சட்டத்தரணி ந. சிறிகாந்தா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் சதாசிவம் குல தேவராசா, கே. ஐயம்பிள்ளை டானியல் ஆகியோரும்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் ஏ.கே

(10 ம் பக்கம் பார்க்க)

# கனேடியத் தூதுவர் றிச்ஆச் மீது இலங்கை அரசு குற்றச்சாட்டு

## உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுகிறாராம்

(கொழும்பு)

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் றிச் ஆச்போட் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாக குற்றஞ் சுமத்தி இலங்கை அரசாங்கம் கனேடிய அரசாங்கத்திடம் உத்தியோக பூர்வமாக முறைப்பாடு செய்துள்ளது.

விடுதலைப்புலிகள்தொடர்பாக இலங்கை அரசாங்கம் கொண்டுள்ள தவறான நிலைப்பாடுகள் தொடர்பாகவும் இலங்கையின் உள்நாட்டு சட்டங்களில் உள்ள குறைபாடுகள் தொடர்பாகவும் கொழும்பில்வெளியாகும் டெய்லிமிரர் பத்திரிகைக்கு தூதுவர் றிச் ஆச் போட் கடந்தவாரம் வழங்கிய பேட்டியில் கடுமையாக விமர்சித்திருந்தார்

இதேவேளை இவ் வருட ஆரம்பத்தில் இவர் அரசாங்கத்தின் அனுமதியின்றி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குச் சென்று அங்கு விடுதலைப்புலி

[10ம் பக்கம் பார்க்க]

துரை பாலகுமார் யாழ்ப்பாணம்] ஆகியபோராளிகளும்

மணலாறு முந்திரிகைக் குளம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை படையினருடன் ஏற்பட்ட மோதலில்-

சிவா (இராசா பாலகுமார் யாழ்மாவட்டம்] என்றபோராளியும் உயிரிழந்துள்ளதாக புலிகளின்குரல் வானொலி அறிவித்துள்ளது. [ந-4]

## இளைஞனின் சடலம் ஒப்படைப்பு

(மட்டக்களப்பு)

இனந்தெரியாத இளைஞர் ஒருவரின் சடலமொன்று சூட்டுக்காயங்களுடன் இராணுவத்தினரால் கண்டெடுக்கப்பட்டு ஏறாவூர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஏறாவூர் ஐயங்கேணி தமிழ்ப் பிரதேசத்தில் இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலிலேயே இவர் இறந்திருக்கலாமெனக் கூறப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து ஏறாவூர் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். [ந-4]

## வன்னிமாவட்டத்தில் சுயேட்சை குழு

[வவுனியா]

வன்னிமாவட்டத்தில் சுயேட்சைக் குழு ஒன்றும் தேர்தல் களத்தில் குதிக்கத் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சுயேட்சைக் குழு தனதுசார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளரைதெரிவு செய்வதில் மும்முரமாகஈடுபட்டுவருகிறது. [வ]

## சீருடை வழங்க ஏற்பாடு

(கொழும்பு]

பாடசாலை மாணவர்களுக்கு அடுத்தவருடத்திற்குரிய இலவச சீருடைகளை எதிர்வரும் நவம்பர்மாதம் 28ம் திகதிக்கு முன்னர்வழங்குமாறு கல்விமற்றும் உயர்கல்வியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்த அறிக்கைஒன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

யாழ்மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்குரிய சீருடைகளைக் கப்பல்மூலம் அனுப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (ந-4

# நல்லூர் பிரதேசசபை
# திருநெல்வேலி
# ரான் நிதி ஒதுக்கீடு
# 2001



எமது பிரதேசத்தின் அபிவிருத்தி புனரமைப்பு பணிகளுக்கு எம்மக்களினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று பின்வரும் ஸ்தாபனங்களுக்கு, கோயில்களுக்கு, பாடசாலைகளுக்கு, சனசமூக நிலையங்களுக்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்கி எமது பிரதேசம் வளம் பெற விளங்கச் செய்து, மக்கள் தமக்கு அளித்த அதிகாரத்தினை சிறப்பாக செயல் படுத்தி அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்று ஒரு வருடகாலத்தில் பல செயல் திட்டங்களை நிறைவேற்றி சாதனை படைத்து, எம் மக்களின் இதயம் நிறைந்து மக்கள் சேவையே மகேசன் சேவை என கருதி அர்ப்பணிப்புடன் செயல்படும் மக்களின் இதயம் நிறைந்த கௌரவ அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான மதிப்பிற்குரிய K.N.டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமாகிய உயர்திரு கா. வே. குகேந்திரன் [ஜெகன்] அவர்கட்கும்,

எமது பிரதேச மக்கள் சார்பிலும், பிரதேச சபையின் உபதலைவர், உறுப்பினர்கள். உத்தியோகத்தர், ஊழியர்கள் சார்பிலும் எமது மனம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

| இல. | நிறுவனம் | ஒதுக்கீடு ரூபா |
|---|---|---|
| 1) | பரவைக்குளம் வாய்கால் அமைப்பு திருநெல்வேலி | 1,000,000 |
| 2. | கொக்குவில் சந்தை கொக்குவில் | 2,000,000 |
| 3. | செங்குந்தா இந்துக் கல்லூரி கல்வியங்காடு | 500,000 |
| 4. | றோமன் கத்தோலிக்க பாடசாலை திருநெல்வேலி | 300,000 |
| 5. | கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம் கந்தர் மடம் | 200,000 |
| 6. | உயரப்புலம் மகா வித்தியாலயம் ஆனைக்கோட்டை | 200,000 |
| 7. | முத்துத்தம்பி சைவவித்தியாலயம் அபிவிருத்திச்சங்கம் திருநெல்வேலி | 500,000 |
| 8. | சிறிஞானவைரவர் தேவஸ்தானம் கோண்டாவில் கிழக்கு | 300,000 |
| 9. | நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவில் கோண்டாவில் | 700,000 |
| 10. | தலையாழி அருள்மிகு சிறி ஞானவைரவர் தேவஸ்தானம் தலையாழி கொக்குவில் | 200,000 |
| 11. | நல்லை ஆதீனம் நல்லூர் | 1,556,747 |
| 12. | மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளும் நல்லூர் | 500,000 |
| 13. | பால்சேகரிக்கும் நிலையம் நல்லூர் | 800,000 |
| 14. | திருநெல்வேலி நவீன சந்தை திருநெல்வேலி | 2,000,000 |
| 15. | மஞ்சவனப்பதி முருகன் கோவில் கொக்குவில் | 1,500,000 |
| 16. | பாதாள விநாயகர் கோவில் கோண்டாவில் | 700,000 |
| 17. | வெட்டுக் குளம் புவனேஸ்வரி அம்பாள் அரியாலை | 75,000 |
| 18. | யாழ். இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம் | 2,583,055 |
| 19. | கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை கொக்குவில் | 1,500,000 |
| 20. | நல்லூர் பிரதேசசபை | 320,000 |
| 21. | சர்வதேச இந்து குருமார் ஒன்றியம் நல்லூர் | 300,000 |
| 22. | செவிப்புலன், விழிப்புலனறறோர் வாழ்வகம் கலட்டி | 4,168,189 |
| 23. | உயர் தொழில்நுட்ப நிறுவனம் கொக்குவில் | 490,000 |
| 24. | சிறிலங்கா புனித அன்புலன்ஸ் நல்லூர் | 357,940 |
| 25. | சித்தி வைரவர் அம்பாள் ஆலயம் கோண்டாவில் | 500,000 |
| 26. | குமரக்கோட்டம் ஞான வைரவர் ஆலயம் கோண்டாவில் | 250,000 |
| 27. | வேதபாராயன ச. ச. நிலையம் கோண்டாவில் மேற்கு | 200,000 |
| 28. | கலைவாணி ச.ச. நிலையம் கொக்குவில் மேற்கு | 100,000 |
| 29. | அமரகவி ச. ச. நி கோண்டாவல் கிழக்கு | 100,000 |
| 30. | இலங்கை நாயகி ச. ச. நி. கோண்டாவில் கிழக்கு | 175,000 |
| 31. | கலைமகள் ச. ச. நி நல்லூர் வடக்கு | 100,000 |
| 32. | வளர்மதி ச. ச. நி கொக்குவில் கிழக்கு | 100,000 |
| 33. | விவேகானந்தா ச.ச. நி M.ப லேன் | 100,000 |
| 34. | மனோன்மணி ச. ச. நி கொக்குவில் கிழக்கு | 100,000 |
| 35. | கலாமன்றம் ச. ச. நி திருநெல்வேலி | 150,000 |
| 36. | கம்பன் ச. ச. நி திருநெல்வேலி | 250,000 |
| 37. | ஞானவைரவர் ச. ச. நி திருநெல்வேலி | 100,000 |
| 38. | நல்லூர் வடக்கு ச. ச. நி நல்லூர் | 100,000 |
| 39. | குமரக்கோட்டம் ச. ச. நி கோண்டாவில் | 100,000 |
| 40. | மகாத்மா ஜி ச. ச. நி திருநெல்வேலி | 100,000 |
| 41. | வாலையம்மன் ச. ச. நி திருநெல்வேலி | 100,000 |
| 42. | பாரதி ச. ச. நி திருநெல்வேலி | 100,000 |
| 43. | கொக்குவில் மேற்கு ச. ச. நி கொக்குவில் | 100,000 |
| 44. | கொக்குவில் மத்திய ச. ச. நி கொக்குவில் | 400,000 |
| 45. | சிறி அற்புத நர்த்தன ச. ச. நி கோண்டாவில் | 100,000 |
| 46. | ஞான வீர ச. ச. நி கோண்டாவில் | 100,000 |
| 47. | கலைமகள் ச. ச. நி கொக்குவில் | 250,000 |
| 48. | கோண்டாவில் மத்திய ச. ச. நி. கோண்டாவில் | 100,000 |
| 49. | ஞான ஒளி ச. ச. நி கோண்டாவில் | 100,000 |
| 50. | காளிகோவிலடி ச. ச. நி திருநெல்வேலி | 100,000 |
| 51. | நேதாஜி ச. ச. நி கொக்குவில் | 100,000 |
| 52. | விவேகானந்தா ச. ச. நி இணுவில் | 100,000 |
| 53. | சிறி கணேச ச. ச. நி கோண்டாவில் | 100,000 |
| 54. | உதய சூரியன் ச. ச. நி இணுவில் | 100,000 |
| 55. | பகுத்தறிவகம் ச. ச. நி திருநெல்வேலி | 100,000 |
| 56. | காந்திஜி ச. ச. நி கொக்குவில் | 100,000 |
| 57. | தலையாழி இந்திரா ச. ச. நி கொக்குவில் | 100,000 |
| 58. | மக்கள் முன்னேற்றக் கழகம் கோண்டாவில் | 100,000 |
| 59. | கலைவாணி ச. ச. நி கோண்டாவில் | 100,000 |
| 60. | வளர் பிறை ச. ச. நி கோண்டாவில் | 100,000 |
| 61. | அம்பாள் ச. ச. நி கொக்குவில் | 150,000 |
| 62) | வராகி ச. ச. நி கொக்குவில் | 150,000, |
| 63) | பிடாரி அம்பாள் ச. ச. நி கொக்குவில் | 350,000 |
| 64) | வகிஸ்வரி ச. ச. நி கோண்டாவில் | 25,000, |
| 65) | நராயணா ச. ச. நி கோண்டாவில் கிழக்கு | 100,000, |
| 66) | பிரம்படி ச. ச. நி கொக்குவில் | 25,000, |
| 67) | மகமாயி ச. ச. நி கோண்டாவில் | 25,000, |
| 68) | நல்லூர் மக்கள் ச. ச. நி கல்வியங்காடு | 250,000, |
| 69) | கலைச்சுடர் ச. ச. நி திருநெல்வேலி | 200,000, |
| 70) | ஆசிமடம் அரச விநாயகர் கோவில் கோண்டாவில் | 300,000, |
| 71) | சிறி கமலாம்பிகா சமேத சிறி கைலாசநாத சுவாமி தேவஸ்தானம் (நல்லூர் சிவன் கோவில்) நல்லூர் | 500,000, |
| 72) | கொக்குவில் மேற்கு சித்தி விநாயகர் ஆலயம் கொக்குவில் | 700,000 |
| 73) | ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபை கோண்டாவில் மேற்கு | 300,000 |
| 74) | அருள் தரு கேணியடி காளிஅம்பாள் தேவஸ்தானம் கோண்டாவில் கிழக்கு | 200,000 |
| 75) | சாமுண்டா தேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் கோவில் தர்ம பரிபாலன சபை கோண்டாவில் வடக்கு | 150,000 |
| 76) | ஸ்ரீ வல்லிபுர நாதர் தேவஸ்தானம் கோண்டாவில் கிழக்கு | 200,000 |
| 77) | குளப்பிட்டி அருள்மிகு மங்கள மகாகாளி தேவஸ்தானம் குளப்பிட்டி | 100,000 |
| 78. | புனித போல் தேவாலயம் கொக்குவில் கிழக்கு | 250,000 |
| 79. | சூடு உகந்தான் பிள்ளையார் கோவில் கொக்குவில் மேற்கு | 300,000 |
| 80. | அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோவில் அரியாலை | 150,000 |
| 81. | இற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை நந்தாவில் கொக்குவில் கிழக்கு | 400,000 |
| 82. | அருள் மிகு ஸ்ரீ முத்து மாரி அம்மன் தேவஸ்தானம் திருநெல்வேலி | 200,000 |
| 83. | ஸ்ரீ சொர்ணசித்தி விநாயகர் தேவஸ்தானம் கொக்குவில் மேற்கு | 500,000 |
| 84. | ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானம் கோண்டாவில் மேற்கு | 10,0000 |
| 85. | கோணாவளை வைர சுவாமி கோவில் பரிபாலன சபை கொக்குவில் கிழக்கு | 150,000 |
| 86. | ஸ்ரீ சிவசுப்பிர சுவாமி தேவஸ்தானம் மணியர்பதி கொக்குவில் மேற்கு | 140,000 |
| 87. | ஸ்ரீ ஞான வைரவப்பெருமான் தேவஸ்தான பரிபாலன சபை திருநெல்வேலி வடக்கு | 150,000 |
| 88. | பரி சுத்த திருத்துவ ஆலயம் K.K.S. வீதி கொக்குவில் | 200,000 |

(3-ம் பக்கம் பார்க்க)

# பால்மா விலை அதிகரிப்பு ஆராய குழு அமைப்பு

(கொழும்பு)

பால்மா விலை அதிகரிப்புத் தொடர்பாக ஆராயும் பொருட்டு தனிநபர் விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இவ் விசாரணைக் குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் பால்மாவின் விலை கட்டுப்படுத்தப்படுமென உணவு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் டி. எம். ஜயரத்தின தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலை குறைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன் இதனை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-5)

# ஐ. தே. க. வின் துரோக தனத்திற்குமக்கள் துணைபோகக் கூடாது

(கொழும்பு)

1994 ஆம் ஆண்டு நாம் ஆட்சி அமைக்கும் போது யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான கட்டடங்களில் விடுதலைப்புலிகள் நிலைகொண்டிருந்தனர். நாம் ஆட்சி அமைத்ததும் அவர்களை அங்கிருந்து முல்லைத்தீவிற்கு அனுப்பி வைத்தோம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர், மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஐ ரி. என் தொலைக்காட்சியில் நேற்றுமுன்தினமிரவு நடைபெற்ற விவாதம் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விவாதத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது கூறுகையில்;

ஐக்கிய தேசியக் கட்சியும் விடுதலைப்புலிகளும் இணைந்து நாட்டை படுகுழியில் விழுத்தப்பார்க்கிறார்கள் இதற்கு இவர்களை மக்கள் ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது என்றார்.

இவ் விவாதத்தில் அனுரா பிரியதர்ஷன யாப்பா மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் டிரோன் பெர்னாண்டோ ஆகியோர்கலந்து கொண்டார்கள். (வ)


யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர்கள்சங்கம்

## அறிவித்தல்

யாழ்ப்பாணமாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் இன்று (20-10-2001)முதல்நடாத்தப்படும்,யாழ்.வவுனியா. மட்டக்களப்பு ஆகிய மாவட்ட அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு எமது சங்கத்தினால் கிரிக்கெட்மத்தியஸ்தர்கள நியமிக்கபபட வில்லை. என்பதை சகலகிரிக்கெட் நலன் விரும்பிகளுக்கும், ரசிகர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

424,1/1கின்னர்லேன் யாழ்ப்பாணம் — கௌரவ செயலாளர்

[3872]


# ஜே வி பி ஆதரவாளர் தாக்கப்பட்டனர்

(கொழும்பு)

நுகேகொட பகுதியில் கலை நிகழ்ச்சி ஒன்றுக்காக சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த ஜே. வி பியின் ஆதரவாளர்கள் சிலர் இனந்தெரியாத நபர்களினால் தாக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் அதிகாலை சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்தசமயம் வான்ஒன்றில்வந்த இனந்தெரியாத நபர்கள் இவர்களைக் கண்டபடி தாக்கி விட்டு வானில் தப்பிச் சென்றுள்ளனர். (ந-5)

# மட்டு மாணவன் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு திறந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவர் கடந்த 14 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசமான கரையாற்றம் தீவைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை குழந்தை வடிவேல் என்ற மாணவரே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மனித வுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-5)

# தே. அ. அட்டை வந்து சேர்ந்தது

(யாழ்ப்பாணம)

சாவகச்சேரி மகளிர்கல்லூரியில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தமாணவிகளின் ஒரு தொகுதியே தேசிய அடையாள அட்டைகள் வந்து சேர்ந்துள்ளது,

கரவெட்டி ரலன்ற் கல்வி நிலையத்தில் இயங்கும் மேற்படி கல்லூரிக்கு வந்து அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொளளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (செ)

# க.பொ.த. (சா.த) மாணவர்களுக்கான கணித,விஞ்ஞான பயிற்சி

(வல்வெட்டித்துறை)

யாழ் கல்வி வலயத்தின் அனுசரணையுடன், யாழ் கணித, விஞ்ஞான வளநிலையம் நடத்துமயாழ். வலயப் பாடசாலை க. பொ. த (சா/த) மாணவர்களுக்கான பயிற்சித்தேர்வுஎதிர்வரும்திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது.

22,ஆம்திகதிதிங்கட்கிழமை கணிதபாடத்திற்கும் 23 ஆம் திகதிசெவ்வாய்க்கிழமை விஞ்ஞான பாடத்திற்கும் பயிற்சித் தேர்வுநடை பெறவுள்ளது, (செ-217]

# வரிசெலுத்துவதில்இழுபறி வியாபாரிகள் வீதியில்

(உரும்பிராய்)

உரும்பிராய் மத்திய சந்தை வியாபாரிகளுக்கும், அதனை நிர்வகித்துவரும் பிரதேச சபையினர்க்கும் இடையேஏற்பட்ட இழுபறியினால் மேற்படி சந்தை மூடப்பட்டுள்ளது.

வியாபாரிகள் வரிசெலுத்துவதில் ஏற்பட்ட முரண்பாடே இந் நிலைக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை, சந்தை மூடப்பட்ட நிலயில் அங்கு வியாபாரம்செய்துவந்தவர்கள் வீதியோரங்களிலு கடைவாசல்களிலும் தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதால் அவ் வீதியால் செல்வோர் பெரும் சிரமத்திற்கு ஆளாவதை அவதானிக்க முடிகின்றது.

(உ-215)

# கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுத் தேர்தல் தொர்பான கலந்துரையாடல் நாளை முப 10 மணிக்கு யாழ் கூட்டணி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய வீ. ஆனந்தசங்கரி மாவை சோ. சேனாதிராசா, சி.சிவமகாராசா மற்றும் யாழ் மாநகர முதல்வர் ந.இரவிராஜ் ஆகியோர் கலந்துகொண்டுசிறப்புரையாற்றவுள்ளனர். (உ)

# தினபூமி நாளிதழ் காரியாலயம்மீதுதாக்குதல்

(மதுரை)

மதுரை தின நாளிதழ் காரியாலயம் தாக்கப் பட்டதில் பலர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன் தினம் மதுரை தினபூமி பத்திரிகை காரியாலயததுக்கு நான்கு வாகனங்களில் சென்றவர்கள் காவல் பணியில் இருந்தவர்களைத் தாக்கிவிட்டு காரியாலயத்தின் முன்பக்கத்தையும் சேதப்படுத்தினர்.

உள்ளே நுழைந்த சிலர் செய்தியாளர்களைத் கண்டபடி தாக்கி விட்டு ஓடிவிட்டனர்.

செய்தி அறிந்து அங்கு விரைந்த பொலிசார் விசாரணையின் பின்இது அதிருப்தியாளர்களின் செயலாக இருக்கலாமென்று தெரிவித்துள்ளார். (து)


# நல்லூர் பிரதேசசபை திருநெல்வேலி ரான் நிதி ஒதுக்கீடு - 2001

[2ம் பக்கத் தொடர்ச்சி]

| இல. | நிறுவனம் | ஒதுக்கீடு ரூபா |
|---|---|---|
| 89. | ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம் திருநெல்வேலி | 350,000 |
| 90. | ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம் நீரா நெச்சித்தாழ்வு, அரியாலை | 500,000 |
| 91. | சங்கிலியன் தோப்பு கிராம அபி சங்கம் நல்லூர் | 400,000 |
| 92. | சங்கிலியன் தோப்பு கிராம அபி சங்கம் நலலூர் | 150,000 |
| 93. | விவேகானந்தா ச. ச. நி. கோண்டாவில் | 150,000 |
| 94. | நல்லூர் ஞானோதயா வித்தி, நல்லூர் | 35,000 |
| 95. | கொககுவில் இந்து கல்லூரி | 1.000,000 |
| 96. | கோண்டாவில இந்து மகா வித்தி. கோண்டாவில் | 400,000 |
| 97. | ஸ்ரீ ஞானபண்டிதர் வித்தியாசசாலை நல்லூர் | 400,000 |
| 98. | வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தி ஆனைக்கோட்டை | 400,000 |
| 99. | கொககுவில் மேற்கு சி. சி. த. க. பாடசாலை | 40,000 |
| 100. | கோண்டாவில் றோ. க. த. க. பாடசாலை கோண்டாவில் | 400,000 |
| 101. | கொக்குவில் ஸ்தான சி. சி. த. க. பாடசாலை கொக்குவில் | 60,000 |
| 102. | யாழ். இந்து ஆரம்ப பாடசாலை யாழ்ப்பாணம் | 1,100,000 |
| 103. | கல்வியங்காடு இ. து. க. பாடசாலை நல்லூர் | 400,000 |
| 104. | ஆனைப்பந்தி மெ மிஷன் வித்தி யாழ்ப்பாணம் | 300,000 |
| 105. | கோண்டாவில் சி. சி. த. க. பாடசாலை கோண்டாவில் | 300,000 |
| 106. | திருநெல்வேலி இ. த. க. பாடசாலை திருநெல்வேலி | 400,000 |
| 107. | கோண்டாவில் பரஞ்சோதி வித்தி கோண்டாவில் | 400,000 |
| 108. | புனித பெனடிக்ற் றோ. க. வித்தி நல்லூர் | 400,000 |
| 109. | கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தி கொக்குவில் கிழக்கு | 500,000 |
| 110. | கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தி கொக்குவில் | 400,000 |
| 111. | உயரப்புலம் மெ. மி. த. க. வித்தி, ஆனைக்கோட்டை | 400,000 |
| 112. | இளையதம்பி இந்து வித்தி, வண்ணார்பண்ணை | 400 000 |
| 113. | அரியாலை கிழககு அ. த. க பாடசாலை அரியாலை | 400,000 |
| 114. | நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை நல்லூர் | 500,000 |
| 115. | நாயனமார்க்கட்டு மகேஸ்வரி வித்தி, நல்லூர் | 400,000 |
| 116. | நல்லூர் ஸ்தான சி.சி.த.க., நல்லூர் | 400,000 |
| 117. | முதது்தம்பி மகா வித்தியாலயம், திருநெலவேலி | 400,000 |
| 118. | கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தி கோண்டாவில் | 400,000 |
| 119. | யாழ் இந்துமகளிர் கல்லூரி யாழ்ப்பாணம் | 1,000,000 |
| 120. | யாழ் பூம்புகார் மகளிர் தமிழ் வித்தி அரியாலை | 400,000 |
| 121. | நல்லூர் ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் தேவஸ்தானம் நல்லூர் வடக்கு | 400,000 |
| 122. | திருவருள்மிகு அன்னை காமாட்சியம்பாள் ஆலய பரிபாலன சபை தாவடி, குழந்தைச் சிட்டி கணையன் வளவு | 300,000 |
| 123. | புனித ஜேம்ஸ் தேவாலயம் செம்மணி விதி நல்லூர் | 400,000 |
| 124. | சபரிசா ஐயப்பன் ஆலயம் | 500,000 |
| 125. | கோண்டாவில் மத்திய சனசமூக நிலையம் | 250,000 |
| 126. | கோண்டாவில் விவேகானந்தா சனசமூக நிலையம் | 100,000 |
| 127. | வேம்படி முருகமூர்த்தி கோயில் | 500,000 |

**பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின் நன்மை கடலிற் பெரிது**

என்றும் மக்கள் சேவைக்குரிய

**க. மணிபல்லவராஜன்** (ஜே. பி, யு. எம்)

தலைவர்

நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.

(சி-2756)

## சிறு விளம்பரம்

### திருமண சேவை

1965, 66, 67 ஆகிய ஆண்டுகளில் பிறந்த பட்டதாரி மணமகன்களும் 1967, 68, 69, 70 ஆகிய ஆண்டுகளில் பிறந்த டாக்டர்கள், பொறியியலாளர்கள், வர்த்தகர்கள், வெளிநாட்டுபிரஜா உரிமை பெற்ற மணமகன்களும் உண்டு. (எல்லா மதத்தவர்களுக்கும்) தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை, 770, பருத்தித்துறை வீதி, (அம்பாள் சைவ உணவகம் மேல் மாடி) நல்லூர். (செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாட்கள் நேரம் 10:30-6.00 வரை) [3853]

### O/L கணிதம் 2001

ஆரம்ப அறிவிலிருந்து சகல அலகுகளும் கற்பிக்கப்பட்டு மீட்டலுடன் வினா விடை வகுப்புக்களும் நேரத்திற்கு பரீட்சை செய்யும் பயிற்சியும் Distinction பெறு பேறடைவதற்காக 20 நாட்களில் 40 மணித்தியாலங்களில் நிறைவேற்றப்படும். தொடர்பு: க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (3855)

### தேவை

யாழ். நகரில் இயங்கும் புடைவைக் கடை ஒன்றிற்கு பெண் கணக்காளர் தேவை சகல விபரங்களுடனும் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி விளம்பர இல-228, மே/பா, வலம்புரி, யாழ்ப்பாணம். (C-2759)

## அலுவலகம் திறப்பு

(ஏழாலை)

வலிதெற்கு பிரதேச சபைக்குட்பட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கான அலுவலகம் சுன்னாகம் பிரதேச சபை அலுவலகத்தில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. (உ-206)

# இழந்த பனைகளை ஈடுசெய்யும் முயற்சி வெற்றிகரமாக முன்னெடுப்பு

(மந்திகை)

இவ்வருடம் 2 இலட்சத்து 50 ஆயிரம் பனம் விதைகளை நடும் திட்டம் தற்போது அமுல் படுத்தப்பட்டு வருவதாக பனை அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

பனம் விதைகள் முளை கொள்வதற்கு ஏற்ற கால நிலை தற்போது நிலவுவதால் இப்பணி மும்முரமாக இடம் பெறுவதாகவும், இப்பணி பிரதேச செயலர்களின் உதவியுடன் கிராம சேவையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தித் தொண்டர்களால் முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யுத்த அனர்த்தங்களினால் இழக்கப்பட்ட பனைகளின் தொகையினை ஈடு செய்யும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ்பிரதேச செயலர் ரீதியாக,

நெடுந்தீவில் 15 ஆயிரம், வேலணையில் 10 ஆயிரம், ஊர்காவற்றுறையில் 25 ஆயிரம், யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பகுதிகளில் தலா 2 ஆயிரத்து 500, சங்கானை, பருத்துறை, மருதங்கேணி ஆகிய பகுதிகளில் தலா 30 ஆயிரம், சண்டிலிப்பாய், கோப்பாய், கரவெட்டி ஆகிய பகுதிகளில் தலா 25 ஆயிரம், தெல்லிப்பழை, உடுவில் பகுதிகளில் தலா 15 ஆயிரம் என்ற ரீதியில் பனை விதை நடுகைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பனைஅபிவிருத்திச்சபை பொது முகாமையாளர் எஸ். கோகுலதாசன் தெரிவித்தார் (உ-23,77)

## விண்ணப்பம் கோரல்

(மானிப்பாய்)

இலங்கைத் தொழில் நுட்பவியல் சேவையில் படவரைஞர் பதவிகளை வகிக்கும் வகுப்பு11 ஆ, விலுள்ள அலுவலர்களை வகுப்பு 11 அ' விற்கு தரம் உயர்த்துவதற்கு மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி கூட்டுறவுகிராம அபிவிருத்தி வீதி அபிவிருத்தி கைத் தொழில் அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர்களின் சிபார்சுடன் இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-120)

## நவராத்திரி விழா

(மானிப்பாய்)

மானிப்பாய் கோவிற்பற்று இந்து சமய விருத்திச் சங்கத்தினரால் நடத்தப்படும் நவராத்திரி விழா இன்று காலை 9. 00 மணி முதல் மானிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் இந்து சமய விருத்திச் சங்கத் தலைவர் செல்வி, இ. சுப்பையாபிள்ளை தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் 'சக்தியின் மகத்துவம்' என்னும் பொருள் பற்றி சைவப்புலவர் சைவசித்தாந்தப் பண்டிதர் க. நித்திய தசீதரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். [உ-120]

## வாணிவிழா

(கொழும்புத்துறை)

நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தின் வாணி விழா நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பி ப 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் 'நவராத்திரியின் மகிமை' என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

அத்துடன் இவ்வருடம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும், பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற பட்டதாரிகளும் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர். (செ-223)

## நிர்வாகக்குழு கூட்டம்

[மீசாலை]

சாந்திக நிறுவனத்தின் 125 வது நிர்வாகக் குழுக்கூட்டம் இன்று பி.ப 3:00 மணிக்கு சாந்திக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [உ-229]


செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ் ஸ்தாபனத்தாரும் யாழ். சேவையும் இணைந்து வழங்கும்

தீபாவளி வாழ்த்துச் செய்திகள்

யாழ். சேவை ஊடாக உங்கள் உறவுகளுக்கு தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறீர்களா?

அப்படியாயின் வாழ்த்தப்படுவோர் பெயர்களை எழுதி கீழே உள்ள கூப்பனைப் பூரணப் படுத்தி அனுப்பி வைக்கவும்.


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை கரவெட்டி.

# கேள்வி அறிவித்தல்-2002

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க் காணும் இறைச்சிக் கடைகள், சந்தைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் என்பவற்றை 2002ம் ஆண்டு தை மாதம் 01ந் திகதி தொடக்கம் 2002ம் ஆண்டு மார்கழி மாதம் 31ந் திகதி வரை குத்தகைக்கு விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 02-11-2001 முற்பகல் 10.30 மணி வரை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் நெல்லியடியிலுள்ள தலைமை அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு முற்பகல் 10.45 மணிக்கு திறந்து பரிசீலனை செய்யப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம். கேள்விப்படிவத்தின் இணைப்பிரதி பிரா/உ. உ. ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்கட்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்களை கேள்விப் பத்திரப்பணம், கேள்விப்பத்திரப் பணத்தின் 12.5% ஜீ. எஸ். ரி. கேள்வி வைப்புப்பணம் ஆகியவற்றை செலுத்துவதன் பேரில் அவ்வவ் உப அலுவலகப் பொறுப்பதிகாரிகளிடமிருந்து 01-11-2001ந் திகதி நண்பகல் 12.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டு வருதல்வேண்டும். கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் உப அலுவலகங்களில் அல்லது தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவாக கேள்விகள் சமர்ப்பிப்பவர்களின் கேள்வி வைப்புப் பணம் பறிமுதல் செய்யப்படும்.

| சந்தைகள், இறைச்சிக்கடைகள் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (ஜீ. எஸ். ரி நீங்கலாக) |
|---|---|---|---|
| **நெல்லியடி உப அலுவலகம்** | | | |
| 1. மீன்சந்தை-நெல்லியடி | 150 | 1000 | 1,78,000/- |
| 2. மரக்கறிச்சந்தை நெல்லியடி | 1000 | 20000 | 13,53,000/- |
| 3. கோயிற்சந்தை(துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் உட்பட) | 250 | 3500 | 2,10,000/- |
| 4. கொட்டடிச் சந்தை | 100 | 500 | 4,000/- |
| 5. துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் நெல்லியடி | 150 | 1000 | 80,000/- |

களை எழுதி கீழே உள்ள கூப்பனைப் பூரணப் படுத்தி அனுப்பி வைக்கவும்.

## தீபாவளி வாழ்த்துச் செய்தி

வாழ்த்துவோர் பெயர்: ................................................

................................................

சொந்த முகவரி: ................................................

................................................

தற்காலிக முகவரி: ................................................

................................................

அடையாள அ. இல: ................................................

வாழ்த்துக்கள் வந்து சேரவேண்டிய முகவரி:
உருவாக்கல் இயக்குநர்,

**செனித் மார்க்கட்டிங்**
**அன்ட்**
**அட்வடைசிங் சிஸ்டம்ஸ்**

சுண்டுக்குளி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

வாழ்த்துக்கள் வந்து சேர வேண்டிய இறுதித் திகதி: 10-11-2001

இயக்குநர்
செனித் மார்க்கட்டிங்
அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்,

[/கி2740]

| | | | |
|---|---|---|---|
| ... | 250 | 3500 | 2,10,000/- |
| 4. கொட்டடிச் சந்தை | 100 | 500 | 4,000/- |
| 5. துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் நெல்லியடி | 150 | 1000 | 80,000/- |
| 6. நெல்லியடி-ஆட்டிறைச்சிக் கடை இல: 1 | 100 | 500 | 20,000/- |
| 7. நெல்லியடி-ஆட்டிறைச்சிக்கடை இல: 2 | 100 | 500 | 22,000/- |
| 8. நெல்லியடி-ஆட்டிறைச்சிக்கடை இல: 3 | 100 | 500 | 18,000/- |
| 9. மாட்டிறைச்சிக்கடை இல: 2 | 150 | 3000 | 2,43,000/- |
| 10. ,, : 3 | 150 | 3000 | 2,43,000/- |
| 11. கோயிற்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 150 | 500 | 18,000/- |
| 12. கொட்டடிச் சந்தை ,, | 100 | 500 | 6,000/- |
| 13. கோயிற்சந்தை மாட்டிறைச்சிக் கடை | 100 | 1000 | 1,32,000/- |
| **உடுப்பிட்டி உப அலுவலகம்** | | | |
| 14. உடுப்பிட்டிச் சந்தை | 500 | 5000 | 4,69,000/- |
| 15. அந்திரான் சந்தை | 150 | 500 | 21,000/ |
| 16. நவிண்டில் சந்தை | 100 | 500 | 7,000/- |
| 17. உடுப்பிட்டிச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 150 | 2000 | 3,42,000/- |
| 18. ,, ஆட்டிறைச்சிக்கடை | 100 | 500 | 8,000/- |
| 19. அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 100 | 500 | 33,000/- |
| 20. உடுப்பிட்டி துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 100 | 500 | 54,000/- |
| **கட்டைவேலி உப அலுவலகம்** | | | |
| 21. துன்னாலை வடக்கு சந்தை | 100 | 500 | 700/- |
| 22. ,, ,, ஆட்டிறைச்சிக்கடை | 100 | 500 | 23,000/- |
| 23. அல்வாய் தெற்கு சந்தை மாட்டிறைச்சிக் கடை | 100 | 500 | 16,000/- |

த. ஜெயராசா ஜே. பி.
தலைவர்
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

வட: தெ: மே: பிரதேச சபை,
கரவெட்டி.
17-10-2001

[C/2755]

# தேர்தல் தொகுதி மாற்ற வதந்தி
# சிறிகோத்தா முன் ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)
கேகாலைமாவட்ட ஐ.தே. கட்சி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல்.எம். பாரூக் தனது ஆதரவாளர்கள் புடை சூழ 40 பஸ்களில் கொழும்பு சென்று ஐ.தே. கட்சியின் அலுவலகமான சிறிகோத்தாவிற்கு முன் ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐ.தே.கட்சியைச் சேர்ந்த ருகமன் சேனநாயக்கா பொலநறுவையில் தோல்வியடையும் வாய்ப்பு பெருமளவு உள்ளதால் அவரை கேகாலை மாவட்டத்தின் தேர்தலில் தலைமை வேட்பாளராக நிறுத்துவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி உத்தேசித்து வருகிறது என்ற தகவலை அறிந்தே பாரூக் தனது ஆட்சேபனையைத் தெரிவிக்க கொழும்பு சென்று ஆர்ப்பாட்டத்தில் இறங்கப் போவதாக அவரின் ஆதரவாளர் ஒருவர் தெரிவித்துள்ளார் என்று மேலும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

பாரூக் 1964 ஆம் ஆண்டிலிருந்தே ஐ.தே. கட்சியில் இருந்து வருகிறார். பன்னிரண்டு ஆண்டுகள் கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்துள்ளார்.

டி.எஸ். சேனநாயக்காவின் குடும்பத்தவரானே ருக்மன் சேனநாயக்காவிற்கு அவரது முன்னோரின் தொகுதியான பொலநறுவையில் கடந்த தேர்தலில்விருப்பு வாக்குகள போதுமான அளவில்கிடைக்கவில்லை. எனவே ருக்மனைக் காப்பாற்றவே ஐ.தே.க பாரூக்கின் தொகுதியைஅவருக்கு வழங்க உள்ளதாகவும் அதனால் பாரூக் வெறுப்படைந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது [எ]

## வாழைத் தோட்ட விவசாயிகள் நிவாரணம் இருமடங்கு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)
வாழையின் அழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான உதவி தொகையை இரு மடங்காக அதிகரித்து வழங்குவதற்கு வடக்கு, கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் இணங்கி உள்ளதால் அந்நிதி கிடைத்ததும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்று கமகல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.

2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இடம்பெற்ற சூறாவளியால் விவசாயிகளின் வாழைத் தோட்டங்கள் பெரிய அழிவிற்குள்ளாகின.

புத்தூர், உரும்பிராய் கமநல சேவைகள் நிலையங்களில் மேற்படி அழிவினால் பாதிக்கப்பட்ட 1612 விவசாயிகள் தமது பெயர்களைப் பதிவு செய்திருந்தனர். அவர்களுக்கு மொத்தமாக 604200 ரூபா உதவித் தொகையாக ஒதுக்கப்பட்டது.

தமக்கு ஏற்பட்ட அழிவுகளுக்கு ஏற்ப உதவிதொகை போதுமானதாக இல்லை என்று குறித்த விவசாயிகள் வடக்கு கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கடந்த மாதம் சந்தித்து தமது குறைகளை எடுத்து விளக்கியதற்கு அமையவே அவர் அவர்களின் உதவி தொகையை இரட்டிப்பாக அதிகரித்துக் கொடுப்பதாகத் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-9,19

## பொது வேலை நிறுத்தம் இறுதித் தீர்மானம் இன்று தெரிய வரும்

(கொழும்பு)
நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த மூவாயிரம் ரூபாஇடைக்கால அலவன்ஸ் கோரிக்கை மீதான பொது வேலை நிறுத்தம் நடத்தப்பட வேண்டுமா? என்பதை இறுதியாக தீர்மானிப்பதற்கு ரயில்வே ஐக்கிய தொழிலாளர் முன்னணி இன்று கூடவுள்ளது.

170 தொழிற்சங்கங்கள் நவம்பர் முதலாம் திகதியில் இருந்து மூவாயிரம் ரூபா இடைக்கால அலவன்ஸ், பால்மா உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைப்பு, அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவுப்புள்ளி ஒவ்வொன்றுக்கும் 5/ ரூபா வீதம் கொடுப்பனவு ஆகியவற்றைக் கோரி வேலை நிறுத்தம் மேற்கொள்ளவிருந்தது தெரிந்ததே. (உ)

## ஜ.இ. முன்னணி பு.ஜ.கட்சி இணைந்து போட்டி

(கொழும்பு)
எதிர்வரும் தேர்தலில்புதிய ஜனநாயககட்சியும்,வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணியும் இணைந்து மணிக்கூட்டுச் சின்னத்தில் போட்டியிடுவதென இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்த இரண்டு கட்சிகளுக்கிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் யுத்தநிறுத்தம் பேச்சுவார்த்தை, சுயநிர்ணய உரிமை, சுயாட்சி அடிப்படையிலான அரசியல்தீர்வு,மக்கள் மீதான பொருளாதாரச் சுமைகள், வாழ்க்கை நெருக்கடிகளை அகற்றுதல் ஜனநாயக மனித உரிமை, விரோதச் சட்டங்களை நீக்குதல்போன்றவற்றை முதன்மைப்படுத்தி அவற்றை வென்றெடுப்பதற்கான தேர்தல் விஞ்ஞாபனத்தை முன்வைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன முன்னணி ஆகிய இரண்டு பேரினவாத ஆளும் வர்க்க கட்சிகளுக்கு அப்பால் மக்களை அணிதிரட்டி நேர்மையான இடதுசாரி ஜனநாயக முற்போக்கு அணிகளினூடே மூன்றாவது சக்தி ஒன்றினைத் தோற்றுவிப்பதற்கான அடித்தளத்தை இத்தேர்தல் இயக்கத்தின் ஊடாக முன்னெடுப்பது எனவும் மேற்படி இணக்கத்தில் வற்புறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. [செ]

## வருகின்ற தேர்தலுக்கு அரசின் சீனி போனை
### பீரிஸ் கிண்டல்

(கொழும்பு)
மக்களுக்கு அறிவித்தபடி சலுகைகளை வழங்குவதற்கு அரசாங்கம் எங்கிருந்து பணத்தைப் பெறப் போகிறது என்று முன்னாள் அமைச்சர் ஜீ எல். பீரிஸ்கேள்விஎழுப்பியுள்ளார். டீசல் வரி நிறுத்தப்பட்டதால் 7000 மில்லியன் வருவாய் குறையும். அரசாங்க ஊழியருக்கு 1500 ரூபா சம்பளத்தில் உயர்த்தப்பட்டதாலும், ஓய்வூதியத்தில் 750 ரூபா உயர்த்தப்பட்டதாலும் 4000 மில்லியன் செலவு அதிகரிக்கும் என்று மேலும் சுட்டிக்காட்டிய முன்னாள் அமைச்சர், வரவிருக்கும் தேர்தலிலே வாக்குகளைப் பெறுவதற்காக சீனி போனை வழங்கும இந்தச் செயல் மக்களை அவமதிப்பதாகும் என்று கூறினார்.

தேசிய பாதுகாப்பு வரி, டீசல் வரி ஆகியவற்றைப் பொறுத்தவரை அமைச்சரவையின் ஆட்சேபத்தின் மத்தியில் மன்னர்காலத்து குதிரை வீரன் பாணியில் ஜனாதிபதியே உத்தரவிட்டவர் என்று பீரிஸ் தொடர்ந்து பேசுகையில் கூறினார். (எ)

## திருமலையில் தாக்குதல்

(திருகோணமலை)
திருகோணமலை சீனன்குடா துறைமுகப் பகுதியில் அமைந்துள்ள இராணுவக் காவலரண்கள் இரண்டின் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதலில் நான்கு இராணுவத்தினரும் ஊர்காவற் படை வீரர் ஒருவரும் காயமடைந்ததாகவும் மேலும் ஒரு ஊர்காவற் படை வீரர் காணாமற் போயுள்ளதாகவும் விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## விபத்தில் காயம்

(மந்திகை)
மோட்டார் சைக்கிள், ஆட்டோ விபத்துக்குள்ளானதில் காயமடைந்த ஒருவர் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை மந்திகை சாவகச்சேரி வீதிப்பகுதியில்இடம்பெற்றஇவ்விபத்தில் துன்னாலை கிழக்கைச்சேர்ந்த வி.வினோதன் (வயது-25) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார். (செ-53)

★ ★ ★

(மந்திகை)
மோட்டார் சைக்கிள், சைக்கிள் விபத்துக்குள்ளானதில் காயமடைந்த இருவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை மந்திகை சாவகச்சேரி வீதிப்பகுதியில்இடம்பெற்ற இவ்விபத்தில் உடுப்பிட்டி இமையாணனைச்சேர்ந்த கே.கனகசபை (வயது-57)இதே இடத்தைச் சேர்ந்த இ இலங்காதுரை (வயது-38)ஆகிய இருவருமே இவ்வாறு காயமடைந்தவர்களாவர். (செ-23)

## நவராத்திரிப் பாமாலை



இலக்குமி துதி

### ஒரு நாளும் மறவோம்

திரு மகளே அலைமகளே வாவா
திரு வருளை தினம் எமக்கே தாதா
இரு கரமே தரவருவாய் நீயே உனை
ஒரு நாளும் மறவோமே நாங்கள்

சிந்துஜா கணேசலிங்கம்
தரம் - 10
யாழ்ப்பாணக் கல்லூரி.

### விடுதலையைத் தருவாயே

உலகத்தை இயக்குகின்ற ஆதிபரா சக்தியே
உளத்தால் வணங்குகிறோம் நவராத்திரியில்
கல்விக்கும் செல்வத்திற்கும் வீரத்திற்குமான
கவலையை தீர்த்து விடுதலையைத் தருவாயே

வி. கஜந்தினி
தரம் - 11
வேம்படி மகளிர் கல்லூரி

### நல்வரங்கள் தாருமம்மா

நவசக்தி நாயகியே நாம் வணங்கும் தேவியே
புவனமதைக் காப்பவளே புதுவாழ்வு தாருமம்மா!
தவமிருந்து பசித்திருந்து தவித்திருந்து உனை
நவதினங்கள் தொழுதிடவே நல்வரங்கள்
தாருமம்மா

த. அஜந்தகுமார்
நெல்லியடி ம.ம.வி.

### வாழ வழி அருள்வாய்

செந்தாமரை மலரிலிருப்பாய்- தாயே
செல்வத்தை எமக்களிப்பாய்
வந்தனை செய்கின்றோம் - தாயே
வாழ வழி அருள்வாய்

க. ஜனனி
தரம் - 12
ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கந்தரோடை

### காக்க நீ வேண்டுமே

கரையில்லாக் கல்வி வேண்டும்
கல்வி கற்கச் செல்வம் வேண்டும்
செல்வம் காக்க வீரம் வேண்டும்
மூன்றும் காக்க நீ வேண்டுமே

ந. துஷாந்
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

## வாக்காளர் பட்டியல் இலக்கம் பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)
தபால்மூல வாக்காளர்களுக்கு தேவைப்படும் வாக்காளர் பட்டியல் இலக்கம் யாழ். செயலகத்தில் உள்ளதாகவும், உரியவர்கள் தங்கள பகுதி வாக்காளர் பட்டியல் இலக்கங்களைப் பெற்று விண்ணப்பப் படிவங்களைபூர்த்தி செய்து அனுப்புமாறும்உதவித் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

வெளிமாவட்டங்களைச் சேர்ந்த தபால்மூல வாக்காளர்களின் வசதிகருதி இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## இளையோர் பாசறை

(மீசாலை)
மானிப்பாய் மறைக் கோட்ட இளையோர் பாசறை நிகழ்வு இன்று சனிக்கிழமைகாலை 8.00 மணிக்கு சாட்டி சிந்தாத்திரை ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. (செ-229)

## சுக வாழ்வு

அறிமுகம் இல்லாத ஒருவருடன் பாலியல்தொடர்பு ஏற்படுத்திக் கொண்டால் கொண்டம் (Condom) பாவித்தல் அவசியம்.

(எயிட்ஸ் - வருமுன் காப்போம்)

-தரிசனம்-

### தமிழக ஆளுநரிடம்

# முறைகேடுகள் நடந்த பகுதிகளில் மீண்டும் தேர்தல் நடத்தக் கோரி

## தி. மு. க. கூட்டணி வலியுறுத்தினர்

(சென்னை)

மாநகராட்சி மற்றும் உள்ளூர் ஆட்சித் தேர்தல்களில் முறைகேடுகள் நடந்துள்ளதாக தி.மு.க. தலைமையிலான எதிர்க்கட்சிகள் மறுதேர்தலுக்கு உத்தரவிடும்படி தமிழக ஆளுநர் ரெங்கராஜனிடம் கேட்டுக் கொண்டன.

தி.மு.க. பொதுச் செயலர் க. அன்பழகன், பா. ஜ. க. மாநிலச் செயலாளர் சிவகணேசன் பாட்டாளி மக்கள் கட்சி செயலர் ஏ.கே. மூர்த்தி உள்ளிட்ட குழுவினர் அண்மையில் சென்னையில் ஆளுநரைச் சந்தித்து வலியுறுத்தினர்

வாக்குச்சாவடிகளில் மோசடிக்கு உடந்தையானவர்களைத் தண்டிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

இதேவேளை தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே. இளங்கோவன் குழுவினர் ஆளுநரிடம் முறைகேடுகளை எடுத்துக் கூறியதுடன், திரும்பவும் தேர்தலை நடத்த உத்தரவிடும்படி கேட்டுக் கொண்டனர்.

செய்தியாளர்களிடம் பேசிய மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அ.இ அ. தி. மு. க தொண்டர்களே சென்னையில் தேர்தல் வாக்குச் சாவடி மோசடிகளில் ஈடுபட்டனரென்றும் தெரிவித்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (து)

### புதுவை

# முதலமைச்சர் சண்முகத்தை நீக்கி புதியவரை நியமிக்க ஏற்பாடு

(புதுடில்லி)

புதுவை முதலமைச்சர் ப. சண்முகம் விலக்கப்பட்டு புதிய முதலமைச்சர் நியமிக்கப்பட இருப்பதாகக் காங்கிரஸ் கட்சி அறிவித்திருக்கிறது.

புதுவை முதலமைச்சர் சண்முகம் நியமனம் பெற்று 6 மாத காலத்தில் சட்டசபை அங்கத்தவராக வேண்டும் என்பது விதி, புதுவையிலுள்ள எந்தக் காங்கிரஸ் சட்டசபை உறுப்பினரும் சண்முகத்துக்காகப் பதவிவிலக முன்வராததால் சண்முகம் பதவி விலக வேண்டியுள்ளது. என்று புதுடில்லியில் கோபால் ரெட்டி தெரிவித்தார்.

சட்ட சபைத் தொகுதியிலிருந்து விலகிக் கொடுக்க முன்வராததால் வேறு ஒருவரைத் தேர்ந்தெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை யென்று செய்தித் தொடர்பாளர் கோபால் ரெட்டி தெரிவித்தார்.

இது தொடர்பாக ஆராய்வதற்காகக் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குலாம் நபி ஆசாத் புதுவைக்கு விரைந்துள்ளார்;

இதேவேளை புதுவை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்ட சபை உறுப்பினர்கள் நிபந்தனையற்ற ஒத்துழைப்பைக் காங்கிரஸ் அரசிற்கு வழங்கப் போவதாக அறிவித்துள்ளனர். (து)

## உலக தரிசனம்

# இந்தியா பாகிஸ்தானுடன் முறையான பேச்சுவைக்காது

(சென்னை)

பாகிஸ்தானுடன் எந்தவித முறையான பேச்சுவார்த்தைகள் இப்போதைக்கு இல்லை என்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்தார்.

கடந்தபுதன்கிழமைசென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் பாகிஸ்தானுடன் பேச்சுக்கள் இல்லை யென்றும். இந்தியா வந்திருந்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் முதலில் காஷ்மீர் பற்றிப் பேசிய கருத்தை மாற்றிக்கொண்டாரென்றும் வாஜ்பாய் தெரிவித்தார்,

மேலும் அவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் காஷ்மீர் தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாட்டையும் கொலின்பவலுக்கு தான் தெளிவாக எடுத்துக் கூறியதாகவும் தெரிவித்தார். [து]

# வசதிக் கட்டணத்தை வங்கியில் இடவேண்டும்

(கொழும்பு)

பாடசாலைகளுக்கு மாணவர்களைப்புதிதாகச்சேர்க்கும் போது பாடசாலைகளால் மாணவர்களின் பெற்றோர்களிடம் அறவிடப்படும் பாடசாலை வசதிக்கட்டணத்தை அடுத்த வருடம் முதல் பாடசாலை வங்கிக் கணக்கில் நேரடியாக வைப்பிலிட வேண்டும் என கல்வி உயர் கல்வி அமைச்சால் சகல பாடசாலைகளுக்கும்அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

இப்புதியநடைமுறைஅடுத்த ஆண்டு பாடசாலைகளில் 1 ஆம் பிரிவுக்கு மாணவர்கள் சேர்க்கப்படும் போது அமுலுக்குவரவுள்ளது. (உ-3)

# வவுனியாவில் தமிழ்த்தினப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் இம்மாதம் 26 ஆம் திகதி அகில இலங்கை ரீதியாக நடைபெறவுள்ள தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கிடையேயான தமிழ்த்தினப் போட்டியில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம்தேசிய கல்வியியல்கல்லூரியைச் சேர்ந்த 60 ஆசிரிய மாணவர்களும்5 விரிவுரையாளர்களும் வவுனியாசென்றுள்ளனர்.

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் நடைபெறவுள்ள இப்போட்டியில் பங்குபற்றச் சென்றவிரிவுரையாளர்களுக்கும், ஆசிரிய மாணவர்களுக்கு மான போக்குவரத்துஒழுங்குகளையும்ஏனைய வசதிகளையும் வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் செய்துள்ளதாக தேசிய கல்வியியல் கல்லூரி உபபீடாதிபதி பா. தனபாலன் தெரிவித்துள்ளார். (எ-9-19)

## சிசுவின் சடலம் மீட்பு

(மந்திகை)

புலோலி வல்லிபுரக் குறிச்சிப் பகுதி வயல் பகுதியில் பிறந்து சில தினங்களேயான சிசுவின் சடலம் ஒன்று கடந்த வியாழனன்று பருத்தித்துறை பொலிஸாரால் மீட்கப்பட்டு பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

பின்னர் நீதிமன்றின் பணிப்பின் பேரில் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டதாக தெரியவந்துள்ளது.

### சொந்தத்தமிழ் இனத்திற்காய்

# எந்தவேளையிலும் வலுவான குரல்

## எழுப்பவே கூட்டமைப்பில் இணைந்தோம்

## ஜோசப் பரராஜசிங்கம் கொள்கை விளக்கம்

(லண்டன்)

தமிழ் மக்கள் மத்தியிலும் தமிழ்க் கட்சிகள் மத்தியிலும் ஒற்றுமைஏற்படுவதற்காகவும் பாராளுமன்றில் தமிழ் மக்களை பிரதி நிதுத்துவப் படுத்தும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் குரல்வலுவானதாக இருக்க வேண்டும் என்பதற்காகவுமே தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் நாம் ஒன்றிணைந்துள்ளோம்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்றஉறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

லண்டன்பி.பி.ஸிக்குநேற்று முன்தினமிரவு அளித்தவிசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறுதெரிவித்திருக்கின்றார்;

பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது; எந்தக்கட்சிஆட்சியமைத்தாலும் நாம் முன்வைக்கும் நான்கு கோரிக்கைகளான உடனடி யுத்த நிறுத்தம், விடுதலைப் புலிகளுக்கு விதிக்கப்பட்ட தடைநீக்கம்வடக்கில் மருந்துகள் உட்பட அத்தியாவசிய பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கம், மற்றும் நோர்வேயின் சமாதானமுயற்சிக்கான மத்தியஸ்தத்தை ஏற்றுக் கொண்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தல் ஆகிய கோரிக்கைகளை நிறைவேற்றும் படி ஆட்சி அமைக்கும்கட்சிக்கு கோரிக்கை விடுப்போம் என்று பரராஜசிங்கம்மேலும் தெரிவித்துள்ளார், [இ-4]

# அந்திராக்ஸ் பக்றீரியா

# கடற்படை தாக்கப்படுவதைத் தடுக்க

இல்லை யென்றும். இந்தியா வந்திருந்த அமெரிக்க வெளி ... தெளிவாக எடுத்துக் கூறிய தாகவும் தெரிவித்தார். [து]

## அந்திராக்ஸ் பக்ரீறியா தபால் பொதியினால் பி.பி.ஸிபணியாளர் பதற்றம்

(லண்டன்)

அமெரிக்காவில் இப்போது காட்டுத் தீ போல் பரவிவரும் அந்திராகஸ் நோயின் பக்ரீறியாக்கள் கடிதம் மூலம் வேறு நாடுகளுக்கும் அனுப்பப்பட்டு வருவதாகவெளியானபரபரப்பான செய்திகளின் மத்தியில் லண்டன் பி.பி.சி. நிலையத்திற்கும் அவ்வாறான கிருமிகள் தாங்கிய ஒரு கடிதம் நேற்று முன்தினம காலை கிடைத்ததாக இன்னொருபரபரப்பான செய்தி வெளியாகியுள்ளது.

இக்கடிதம் இனங்காணப்பட்டதும் பி.ப்.ஸி.யின் பணியாளர்கள அனைவரும் அவசரமாக வெளியேற்றப்பட்டனர்.

இதனால் லண்டன் மாநகரில் பெரிய பதற்றம் நிலவி வருகின்றது. இதே வேளை தென்னாபிரிக்காவின் ஹெப்டோன் பொலிஸ்நிலையத்தில் சந்தேகத்திற்கு இடமான பொதி ஒன்றும அனுப்பப்பட்டுள்ளதென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (செ-7)

# கடற்படை தாக்கப்படுவதைத் தடுக்க இந்தியா பலத்த பாதுகாப்பு

(புதுடில்லி)

இந்திய கடற்படைக்கு பயங்கரவாதிகளிடமிருந்து ஆபத்து வரலாமென்று இரகசியத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

இதனைத் தொடர்ந்து இந்திய கடற்படைக்குச் சொந்தமான கப்பல்களுக்கும், கடற்படைகளுக்கும் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக இந்திய தென்னக் கடற்பரப்பில் பாதுகாப்பு உஷார்படுத்தப் பட்டுள்ளதாகவும், உல்லாசப் பயணத்துறைக் கப்பல்களின் நடமாட்டத்திற்கும், மீன்பிடிக் கப்பல்களுக்கும் தடைவிதிக்கப்பட்டுளளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சகலவிதமான படகுகளினதும், கப்பல்களினதும் நடமாட்டத்திற்குப் படையினர் எச்சரிக்கை விட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முக்கியமாக கொச்சிக் கடற்படைத்துறை தாக்கப்படலாமென இரகசியத் தகவல்கள் கிடைத்ததையடுத்து கண்காணிப்புத்துறை உஷார் படுத்தப்பட்டுள்ளது.

காஷ்மீர் பிரச்சினை தொடர்பாகவும் ஆப்கானின் யுத்தநிலை காரணமாகவும் இந்தியக் கடற்படைக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. [து]

## ஒருநாள் போட்டியில் கென்யா அணி வெற்றி

(பிறிடோறியா)

தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் மூன்று நாடுகள் பங்கு பற்றும் ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில்நடந்த புதன் இந்தியா கென்யா அணிகளிடையே நடைபெற்ற போட்டியில் கென்யா அணி 70 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கென்யா அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 46 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 176ஓட்டங்களை மட்டும் பெற்று தோல்வியை தழுவிக் கொண்டது.

(செ-10)

## அந்திராக்ஸ் பரப்பலுக்கு லிபியதலைவர் கண்டனம்

(ட்ரிபோலி)

அமெரிக்காமீதுஅந்திராக்ஸ் நோயை பரப்பியமைபயங்கரவாதத்தின் உச்சக்கட்ட செயல் என்று லிபியத் தலைவர் மொகமட்கடாபிகூறியுள்ளார்.

இவ்வாறான பயங்கரமான நிலைமையை எதிர் கொள்ள சர்வதேச ரீதியில் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

உண்மையான பயங்கரவாதத்தை நாம் இப்போது எதிர் கொள்கின்றோம் பேரழிவுகளை ஏற்படுத்தும் மோசமான ஆயுதம் அந்திராக்ஸ் தாக்குதல் ஆகும்.

எவ்வாறான கடும்பகைமை இருப்பினும்சகமனிதரிடையே கிருமித் தாக்குதல்நடத்துவது மனித நேயத்திற்குபுறம்பானதாகும் இதனால் மனிதஇனம் பெரும் ஆபத்திற்கு உள்ளாக வேண்டி வரும் என்றும் லிபியத்தலைவர் மொகட் கடாபி தெரிவித்துள்ளார். (உ-7)

## சாரணர் கலந்துரையாடல்

(மீசாலை)

நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் சாரணத் தலைவர்களுக்கான கலந்துரையாடல் யா- நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சாரணர் தலைவர்களுக்கான உயர் பயிற்சிகள் மற்றும் சாரணர் விழா தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

[உ-222]

### இன்று ஒரு தகவல்

## காந்தியின் பெருந்தன்மை

இந்திய சுதந்திரப் போராட்டம் நடந்து கொண்டிருந்த காலம் அது மகாத்மா காந்தியை அரசியல் கைதியாக எரவாடா சிறையில் அடைத்து வைத்திருந்தார்கள். அப்பொழுது அவருடைய செலவுக்காக மாதம் 150 ரூபாய் வழங்க அரசு உத்தரவிட்டது. அவரது அறைக்கு தேவையான வசதிகளை சிறை அதிகாரிகள் செய்து கொடுக்க முனைந்தனர். அறைக்குத் தேவையான மேசை, நாற்காலி போன்றவற்றை கொண்டுவந்து வைத்தனர்.

ஆனால் காந்தியடிகள் ''இவை எனக்குத் தேவையில்லை இவற்றை எடுத்துச் செல்லுங்கள்'' என்று ஏற்க மறுத்துவிட்டார். ''இவை எல்லாம் உங்களுடையவசதிக்காகத்தான் கொண்டுவந்து வைத்துள்ளோம்'' என்று சிறை அதிகாரிகள் கூறினார்கள்.

உடனே காந்தியடிகள் ''என்னுடைய வசதிக்காகச் செலவிடப்படும் தொகை இந்திய மக்களின் பணத்திலிருந்து தானே வருகிறது? அது மக்களுடைய பணம் தானே? அதை வீணாக்க நான் விரும்பவில்லை'' என்று கூறி மறுத்தார்.

சிறை அதிகாரிகள்வற்புறுத்தியும்காத்தியடிகள் அவற்றை ஏற்க மறுத்து விட்டார். ''என்னை மற்றக் கைதிகளைப் போலவே சாதாரணமாக நடத்துங்கள். அதுவே எனக்குப் போதும். அதற்காக மாதம் முப்பத்தைந்து ரூபாய் செலவழித்தாலே போதும்'' என்றார் காந்தியடிகள்.

சிறையில் தனக்கு விசேஷமாக செய்யப்பட்ட வசதிகளை ஏற்க மறுத்து விட, முடிவில் அவருடைய விப்பப்படியே பித்தளையாலான செம்பு, தட்டு என்பனவற்றை காந்தியடிகளின் அறைக்கு சிறை அதிகாரிகள் அனுப்பிவைத்தனர். □

என். ராஜி

#### தேர்தல் காலத்தில்

## நடுநிலையோடு பணியாற்றுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

டிசம்பர் மாதம் 5ம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் பொலிஸ் அதிகாரிகள் நடுநிலையாக பணியாற்ற வேண்டும் என்று பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண தேர்தல் பணிகளுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ்மா அதிபர் கடந்த புதன் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் ஆகியோரை அழைத்து மாநாடொன்றை நடத்திய போது பாராளுமன்றத் தேர்தல்கள் தொடர்பான கடமைகள் பற்றி அவர் அங்கு எடுத்துரைத்தார்.

ஒரு தலைப்பட்சமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலமோ, தேவைப்படும் போது, தேவைப்படும் நடவடிக்கையை எடுக்காமல் விடுவதன் மூலமோ, பொலிசாருக்கு இருக்கும் நற்பெயரை களங்கப்படுத்தி விடக்கூடாது என்றும் அம்மாநாட்டில் அவர் வலியுறுத்தினார்.

### தொலைபேசி சேவை இடைநிறுத்தம்

(மந்திகை)

பருத்தித்துறை நகர சபையில் குறைந்த கட்டணத்துடன் நடத்தப்பட்டு வந்த தொலைபேசிச் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதால் பொது மக்கள் சிரமப்படுவதாகவலைதெரிவிக்கப்படுகின்றது. (செ-53)

### இயங்கவில்லை

(மந்திகை)

பருத்தித்துறை நகர சபையின்கீழ் இயங்கும் நூலகத்தின் சிறுவர் பகுதி மூடப்பட்டதனால்மாணவர்கள பாதிக்கப்பட்டுள்ளனர் என பெற்றோர்கள்கவலைதெரிவித்துள்ளனர்

இச் சிறுவர் பகுதி நகரசபை முன்னாள் தலைவர் அமரர் விஜயரத்தினம் ஞாபகார்த்தமாகவே ஆரம்பிக்கப்பட்டிருந்தமைகுறிப்பிடத்தக்கது. [செ-23)

## இரவு நேரத்தில் படையினர் சோதனை

(கொழும்புத்துறை)

நேற்று முன்தினம் இரவு அத்தியடிச் சந்திப்பகுதியில் படையினர் தீவிர சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். உடற்பரிசோதனை மற்றும் அடையாளஅட்டைப் பரிசோதனை ஆகியன தீவிரமாக இடம்பெற்றன.

அண்மைக்காலமாக இவ்வாறு இரவு வேளைகளில் சோதனையில் ஈடுபடுவதை படையினர் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

### பூஜை நடைபெறுகிறது

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை யோகர் சுவாமிகளின் சமாதிக் கோயிலில் தற்பொழுது தினமும் பூஜை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாலயத்தைச் சூழவுள்ள பகுதிகளில் படையினர் நிலைகொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ-223)

### மாடுகளுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலகப்பிரிவில் மழை காலத்தில் மாடுகளிற் குஏற்படும் தொண்டை நோய்க்கான தடுப்பூசி போடப்படவுள்ளது. அதன் விபரம் வருமாறு,

இன்று சனிக்கிழமை ஜே. 267ஊரெழு பிரிவிற்கு பிள்ளையார் கோவிலடியிலும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை ஜே. 268,269,270 நீர்வேலி தெற்கு, வடக்கு, மேற்கு பிரிவுகளுக்கு கால்நடைவைத்திய நிலையத்திலும் தடுப்பூசி போடப்படும். (செ)

#### தபால் மூல வாக்களிப்பு

## விண்ணப்ப படிவங்களை விரைந்து அனுப்புக

(யாழ்ப்பாணம்)

தபால்மூல வாக்களிப்பு விண்ணப்பப் படிவங்களைப் பூரத்தி செய்து எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி யாழ் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ் நடராசா அறிவித்துள்ளார்.

அஞ்சல் மூலம் வாக்களிப்போருக்குரிய விண்ணப்பப் படிவங்கள் அந்தந்தப் பகுதி அரச ஊழியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் அவற்றைப் பூர்த்தி செய்து கூடிய விரைவில் அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு பகுதி அடங்கலாக யாழ். மாவட்டத்தில் இருந்து 6 இலட்சத்து 33 ஆயிரத்து 457 பேர்வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

#### வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு

## ஆசிய அபிவிருத்தி வங்கி 25மி. அமெ.டொலர் உதவி

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் செய்வதற்கு ஆசிய அபிவிருத்திவங்கி 25 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க முன்வந்துள்ளது.

யுத்தத்தினால் இடம்பெயர்வுகளைச் சந்தித்த மக்களின் வீட்டுவசதி, கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடி, போன்றவற்றிற்கு இவ் உதவிப்பணம் செலவிடப்படவுள்ளது.

தற்போது நாட்டில் நடைபெற்றுவரும் யுத்தம் காரணமாக சுமார் 8லட்சம்மக்கள் இடம்பெயர்ந்தும், வடக்குக் கிழக்கில் 50 வீதம் முதல் 90 வீதம் வரையான மக்கள் வறுமைக்கோட்டின் கீழும் உள்ளார்கள் என்பதும குறிப்பிடத்தக்கது. (ம)

### இடமாற்றம்

(அல்லாரை)

கச்சாயில் இயங்கிவந்த தபாற்கந்தோர தற்போது கொடிகாமம் கிராமக்கோட்டடியில் தற்காலிகமாக இயங்கிவருகின்றது. (வ-210)

### கசிப்பு விற்றவர் பொலிஸாரால் கைது

(இருபாலை)

கோப்பாய் வடக்கு பிளாவத்தையில் சட்ட விரோதமாக கசிப்பு விற்றுவந்த ஒருவர் பொலிஸாரினால் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இதே இடத்தைச் சேர்ந்த கதிரவேலு ரவீந்திரராசா என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

மேற்படி நபரின் வீட்டில் பெருமளவு கசிப்பு மற்றும் வாள் போன்ற ஆயுதம் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இந்நபரின் வீட்டிலிருந்து கோப்பாய் சந்திவரை கசிப்பு, கசிப்பு எனக் கத்துமாறு கூறி வீதிவலமாக அழைத்து வந்து பின்னர் பொலிஸாரின் வாகனத்தில் ஏற்றிச் சென்றனர். (செ-221)

### சைக்கிள் திருட்டு

(துன்னாலை)

நெல்லியடி கன்பொல்லை வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றினுள் இரவு வேளை உள் நுழைந்த திருடர் அங்கு நின்ற புதிய லுமாலா சைக்கிளைத்திருடிச்சென்றுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இத் திருட்டு இடம்பெற்றுள்ளது. (செ-41)

## சாவற்கட்டில் மேலும் 100 வீடுகள் அமைப்பு

### நிதி பெறத் தீர்மானம்

(மானிப்பாய்)

சாவல்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம 100 வீட்டுத் திட்டத்திற்கு மேலாக மேலும் 100 வீடுகளை அமைக்கும் திட்டத்தின் கீழ் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சிடமிருந்து 25 ஆயிரம் ரூபா வீதம் பெற்றுக் கொடுக்க தீர்மானித்துள்ளது.

மேற்படி கூட்டுறவுச் சங்கத்தின்வருடாந்தப்பொதுக் கூட்டம் கடந்த 15 ஆம திகதி 100 வீட்டுத திட்ட பாலர் பாடசாலை மண்டபத்தில் நா. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற போதே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் காக்கைதீவுக் கடலில் மினனல் தாக்கி அண்மையில் 3 பேர் மரணமானதைத் தொடர்ந்து அங்கு 'இடிதாங்கி' ஒன்று அமைப்பதற்கும், இதற்கான மொத்தக் கடன் எல்லை 540 இலட்சம் என்றும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர் சபைத் தேர்தலில் நா. பொன்னம்பலம் தலைவராகவும் இ. சிவகுமார் உபதலைவராகவும் மற்றும் அங்கத்தவர்களாக தெ சிங்கராசா, அ. யோகராணி, மு. நடராசா, இ. பரமேஸ்வரி ஆகியோரும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். (உ-120)

#### மாவட்ட மட்ட

## கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பம்

(கொழும்புத்துறை)

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தவுள்ள மாவட்ட ரீதியான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டங்கள் இன்று மு.ப 10.00மணிமுதல்யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட இச் சுற்றுப் போட்டியின் முதலாவது ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணி எதிர் வவுனியா மாவட்டஅணியும், நாளை ஞாயிற்றுக் கிழமை யாழ். மாவட்ட அணி எதிர், மட்டக்களப்பு மாவட்ட அணியும் மோதவுள்ளன.

இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் எதிர் வரும் 28 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (உ-223)

### பொது அறிவுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

ஒக்ரோபர் 24 ஆம்திகதிஐக்கிய நாடுகள்தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்படும் பொது அறிவுப் போட்டிஎதிர்வரும்23 ஆம் திகதிசெவ்வாய்க்கிழமை பி.ப.2.00 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (செ-9-16)

## கஞ்சா புகைத்த மாணவர்கள் கைது

### பேராதனையில் சம்பவம்

(கொழும்பு)

பாடசாலைக்குச் செல்வதாக வீட்டில்கூறிவிட்டு பாடசாலை செல்லாதுபாழடைந்த வீடொன்றில் இருந்து கஞ்சா புகைத்துக் கொண்டிருந்த மாணவர்கள் எட்டுப் பேர் பொலிசாரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

பேராதனையில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அப் பகுதியைச் சேர்ந்த மேற்படி மாணவர்கள் வீட்டிலிருந்து புத்தகப் பைகளுடன் பாடசாலைக்குச் செல்வதாகக் கூறி விட்டு பாழடைந்த வீடொன்றிலிருந்து கஞ்சா சுருட்டுப் புகைத்து இன்பம் கண்டு கொண்டிருந்தனர்.

பேராதனைப் பொலிசாருக்கு கிடைத்த தகவலையடுத்து பாழடைந்த வீட்டை சோதனையிட்டு பொலிசார் சீருடையில் இருந்த அந்த மாணவர்களை கைதுசெய்துள்ளனர். (இ)

### சிந்தனைக்கு விருந்து

#### உன் அருளைத் தா

செந்தா மரைஉறையும செல்வத் திருமகளே!<br>
நந்தா ஒளிவிளக்கே! நாயகியே!- பைந்தமிழால்<br>
வந்தித்து வாழ்ந்திடுமெம் வாழ்வில் நலம்பெருகச்<br>
சந்ததமும் உனனருளைத் தா.

'பழையவன்'

# இனவாதத்தை எதிர்க்கும் ஊடகங்கள் நாட்டில் உருவாக்கப்பட வேண்டும்

## யுத்திய ஆசிரியர் உரை

(யாழ்ப்பாணம்)

தமிழர்களதும் சிங்களவர்களதும் அடிப்படைப் பிரச்சினைகளை உண்மையாக முன்வைக்கின்ற பத்திரிகைகள் எமது நாட்டில் இல்லை இந்நிலையில் இனவாதத்திற்கு எதிராகச் செயற்படுவதற்கு ஊடகங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

இவ்வாறு யுக்திய பத்திரிகை ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய பத்திரிகையாளர் நிமலராஜனின் முதலாம் ஆண்டு நினைவு தின நிகழ்வில் உரையாற்றுகையில் கூறினார்.

இந்நிகழ்வு கடந்த புதன் கிழமை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கே.கணேசலிங்கத்தின் தலைமையில் நடைபெற்றது மௌன அஞ்சலியின்பின் நிமலராஜனின் சிறிய தந்தையார் அவரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செய்தார்.

யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவரும் வணிகத்துறைத் தலைவருமான க.தேவராஜா பேராசிரியர் சி க சிற்றம்பலம், மாமனிதர் கலைஞானி, கலாநிதி என். சண்முகலிங்கன், யாழ்சேவையைச் சேர்ந்த அனுராத சில்வா ஆகியோர் நினைவுச் சுடரை ஏற்றிவைத்தனர்.

யுக்தியஆசிரியர்தொடர்ந்து பேசுகையில் இனப்பிரச்சினை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் தீர்த்து வைக்கப்பட வேண்டும். யுத்தம் மூலம் எமது நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. நாட்டின் எண்பது வீதமான மக்கள் இதனையே பெரிதும் விரும்புகிறார்கள் என்றார்.

மேலும் அவர் பேசுகையில் நிமலராஜனின் படுகொலை குறித்து பக்கச்சார் பற்ற விசாரணை நடத்த வேண்டும் என்பதைவலியுறுத்தி வடக்கு-கிழக்கு ஊடகவியலாளர் போராட்டம் நடத்த வேண்டும்என்று குறிப்பிட்டார்.

வணபிதா ஜெயக்குமார்' வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தலைவர்கதிர்காமத்தம்பி, முன்னாள் நீதிபதி மு திருநாவுக்கரசு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் ,கஜேந்திரன் ராவய பத்திரிகையின் செய்தியாளர் சுனில் வீரசேகரா ஆகியோரும் பேசினார்கள்.

(எ-106)

### நிமலராஜன்

# நினைவுதின நிகழ்வில் சிங்களத் திரைப்படம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கடந்த புதன் நடைபெற்ற ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் முதலாவது ஆண்டு நினைவு தின நிகழ்வைத்தொடர்ந்து' பௌர்ணமிநிலவில்இருட்டு' என்ற சிங்களதிரைப்படம் காண்பிக்கப்பட்டது.

இத்திரைப்படம் இலங்கை அரசினால்தடைசெய்யப்பட்டு பின்னர் உயர் நீதிமன்ற தீர்ப்பின் பின்திரையிட அனுமதிக்கப்பட்டமை குறிப்டத்தக்கது. (செ-106)


# TENDER NOTICE

Ministry of Urban Development Public Utilities Housing & Sports

## Department of Buildings

1. The Chairperson, Ministry Tender Board Ministry of Urban Development, Public Utilities Housing & Sports will receive sealed tenders for theConstruction of three Storeyed Hostel at University of Jaffna upto 10.00 A. M. on 15.11.2001
2. Tender forms are available for purchase at the Chief Engineer's Offices whose addresses are given in Para 8 below upto 3.30 P. M. on

12-11-2001 on payment of non refundable tender fee of Rupees: One thousand (Rs 1,000.00) only. Belated callers will be charged additionally a late fee of RupeesThree Hundred (Rs. 300.00) only. for each day of delay, prior to issue of tender documents.

3. Tenders will be opened immediately after the closing at the Conference Hall B in the Second Floor, 'Sethsiripaya', Battaramulla. Tenderers or their authorised representatives may be present at the opening of tenders.
4. Tender forms will be issued only to Contractors registered as Building Construction Contractors under the scheme of National Registration and grading of Construction Contractors developed by Institute for Construction Training and Development (ICTAD) for Grade M5 and above having membership of the National Construction Contractors Association of Sri Lanka (NCCASL)
5. Sealed tenders may be dispatched either by registered post or hand delivered to the Chairperson, Ministry Tender Board. Ministry of Urban Development, Public Utilities, Housing & Sports, 'Sethsiripaya' Sri Jayawardenapura, Kotte, Battaramulla to receive before closing time.
6. Tenderers are advised that no late bids will be accepted and they should enter 'Sethsiripaya' Premises at least 01 hour before the scheduled time for tender closing, due to security checking.
7. Tender documents may be inspected free of charge, and any further details could be obtained from the Chief Engineers whose addresses are given in para 8 below.
8. Adresses of Chief Engineers, Offices where the tender documents could be purchased.
   1. Chief Engineer (Jaffna), Department of Buildinga, No. 46, Somasundaram Lane, Jaffna.
   2. Chief Un incer (Colomo Construction) Department of Buildings, Model Farm Road, Colombo 08.

A. D. Wickramasinghe,
Director of Buildings,
Department of Buildings,
"Sethsiripaya" Sri Jayawardenapura,
Kotte, Battaramulla. (C/2758)


### 16, 18 வயது பிரிவு உதைபந்தாட்டத்தில்

# சென். அன்ரனீஸ்அணிகள் இவ்வருட சம்பியனாயின

(சுண்டுக்குளி)

தீவக வலயப் பாடசாலைகளுக்கிடையில் கடந்த ஒரு வாரமாக நடைபெற்று வந்த உதைபந்தாட்டப்போட்டியின் இறுதி ஆட்டங்கள் ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் தீவக வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் எஸ். லோகநாதன் தலைமையில் நடைபெற்றன.

இப்போட்டித் தொடரில் முதலில் இடம்பெற்ற 16 வயதுக்குட்பட்ட பிரிவு 3 ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் வேலணை மத்திய வித்தியாலயம் காரைநகர் தியாகராஜ வித்தியாலயத்தை 1:0 என்ற கோல் கணக்கில் வென்று 3 ஆம் இடத்தை தனதாக்கிக் கொண்டது.

2 ஆவதாக இடம்பெற்ற 16 வயதுக்குட்பட்டவர்களில் பிரிவு 1 ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் சென். அன்ரனீஸ் கல்லூரி, நயினாதீவு ஸ்ரீ கணேசா அணியை 10:0என்றகோல் கணக்கில் இலகுவாக வென்று இவ்வருட சம்பியன் ஆனது.

3 ஆவதாக இடம்பெற்ற 18 வயதுக்குட்பட்டவர்கள் பிரிவு ஆட்டத்தில் சென். அன்ரனீஸ் கல்லூரி அதனை எதிர்த்து ஆடிய வேலணை மத்திய கல்லூரியை 2:1 என்ற கோல் கணக்கில் வென்று இவ்வருட சம்பியன்ஆனது.

16 வயது, 18 வயது ஆகிய 2 பிரிவுகளிலும் ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ் அணிகள் சம்பியன் பட்டத்தை வென்றெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

இவ் ஆட்டங்களுக்கு மத்தியஸ்தர்களாக அகில இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன யாழ் . பிரதிநிதி எஸ். சிளிபேட் அன்ரனிப்பிள்ளை இ . அனோல்ட், ஏ. சிறிகாந் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

இந்நிகவில் யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க தலைவர் கப்டின் டி. ஏ. எம் குணசிங்கம் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார். [உ-75,110]

### சமுர்த்தி ஊழியர்களை

# ஓய்வூதிய திட்டத்தில் இணைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி ஊழியர்கள் விரைவில் ஒய்வூதியத்திட்டத்தின் கீழ் இணைக்கப்படவுள்ளனர் இதற்கான பூர்வாங்க வேலைகளை இலங்கை சமுர்த்தி அதிகாரசபை மேற் கொண்டு வருகின்றது.

இதற்கமைய யாழ் மாவட்டத்தில் கடமையாற்றும் மேற்படி சமுர்த்தி ஊழியர்களின் தரம், சம்பளம் தொடர்பான விபரங்களை தமக்கு அனுப்பிவைக்குமாறு அதிகாரசபை யாழ் செயலகத்தைக் கேட்டுள்ளது.

இதுவரை காலமும் இவ் ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதித்திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-15)

### வண்ணார் பண்ணையில்

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றல்

[யாழ்ப்பாணம்]

மாநகரசபை எல்லைக்குட்பட்ட இடங்களில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி [ஏ. ஆர். வி] மருந்து முதற்கட்டமாக வண்ணார் பண்ணைப் பகுதியில் பின்வரும் நிலையங்களில் வைத்துப் போடப்படும் என்று யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம. மரியதாசன் தெரிவித்தார்.

22 ஆம் திங்கட்கிழமை மு. ப 8. 30-12. 30 வரை வள்ளுவன் சனசமூக நிலையம்.

பி. ப 2. 00-4 30 வரை காமாட்சி சனசமூகநிலையம்.

23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப 8. 30 -12.30 வரை -ஜே. 97, கிராம அலுவலர் காரியாலயம்

பி. ப 2.00 -4 30நீராவியடி சனசமூக நிலையம்

24 ஆம் திகதி வியாழக்கிழமை வரைமு. ப 8.30-12. 30வரை-வேம்படி சனசமூகநிலையம்

பி. ப. 2. 00- 4. 30 வரை ஆத்திசூடி சனசமூக நிலையம்

[உ]

## இராசி பலன்

20-10-2001
(ஐப்பசி 3, சனி)
சதுர்த்தி மு.இ. 9-11 வரை
அனுசம் பி ப 1.07 வரை
இராகுகாலம் 9 02- 10 32
சுபநேரம் 3 02- 4.32
சதுர்த்தி விரதம்.

**மேடம்**
பிரயாண பயம், வீண் தொல்லை, முயற்சிதாமதம், உடல் சோர்வு.

**இடபம்**
காரிய அனுகூலம், சுவாரஸ்யம், நண்பர்கள் உதவி, தனவரவு.

**மிதுனம்**
ஆரோக்கியம், மனமகிழ்ச்சி, முயற்சி கைகூடும், திடீர் பயணம்.

**கடகம்**
அதிகாரம், வியாபார நன்மை, தாழ்ந்த சுபாவம், காரிய தாமதம்.

**சிங்கம்**
சகோதரர் உதவி, திடீர் நன்மை, தன்னம்பிக்கைக் குறைவு. முயற்சி கைகூடும்.

**கன்னி**
வாக்குப்பலிதம், தனவரவு, இனிய சம்பவம், நண்பர்கள் சந்திப்பு.

**துலாம்**
கௌரவக் குறைவு, வீண் வாக்குவாதம், காரிய தாமதம், ரோகம்.

**விருச்சிகம்**
நல்ல முயற்சி. நண்பர்கள் உதவி, ஜனவசியம், சயசுகம்.

**தனுசு**
சுபசெலவு, உணர்ச்சிவசப்படல், திடீர் நன்மை, காரிய தாமதம்.

**மகரம்**
தொழிற் சிந்தை, மனமகிழ்ச்சி, புகழ் முயற்சி கைகூடும்.

**கும்பம்**
நல்ல செய்தி, கீழ்ப்படிவு, தொழிற் சிறப்பு, காரிய நன்மை.

**மீனம்**
உடற் சோர்வு, வீண்பயம், திடீர் நன்மை, கட்டுப்பாடு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

# விபத்தில் காயம்

(கொழும்புத்துறை)

நேற்று முன்தினம் காலை ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில் நாவலர் கல்வி நிலையத்திற்கு முன்பாக படையினரின் மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் மோதியதில் சைக்கிளில் வந்து கொண்டிருந்த ஏழாலையைச் சேர்ந்தசததியசீலன் [வயது19]என்பவர் காயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரது சைக்கிள் முற்றாகச் சேதமடைந்துள்ளது.

இந்த இடத்தில் அடிக்கடி விபத்துக்கள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

(உ-223)

★ ★ ★

[மந்திகை]

மோட்டார் சைக்கிள், கார் விபத்துக்குள்ளானதில் காயமடைந்த ஒருவர்பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தின் முன்னால் இடம்பெற்ற இவ்விபத்தில் தில்லைநாதன் மகாலிங்கம் [வயது-46]என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார்.

(செ-23)

தீவினையார் அஞ்சார் விழு
மியார் அஞ்சுவர்
தீவினை என்னுஞ் செருக்கு
குறள்

# வலம்புரி

## உலகின் மௌனம்

ஆப்கான் மீது அமெரிக்கா மேற்கொள்ளும் தாக்குதல், அளவு கடந்து பொதுமக்களின் உயிர்களைக் காவுகொள்கிறது. ஒஸாமா பின்லேடனின் தாக்குதல், அமெரிக்கப் பொதுமக்களை கொன்றதற்காக, ஆப்கான் மக்களை அமெரிக்கா கொல்வது, குறித்து உலக நாடுகள்'மௌனம் சாதிப்பது வேதனைக்குரியது.

அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதலை ஓடிஓடிக் கண்டித்த நாடுகளும், உலகப் பொது அமைப்புகளும் ஆப்கான் மீதான தாக்குதலைக் கண்டிக்கவில்லை.

தலிபான்களுக்கும், ஒஸாமாபின்லேடனுக்கும் எதிரான தாக்குதல் எனக் கூறிக் கொள்ளும் அமெரிக்கா, ஆப்கான் பொது மக்கள் கொல்லப்படுவதைமறைப்பதற்காக தகவல் தொழில் நுட்ப உரிமைகளை, தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டு பின்தங்கிய நிலையில் இருக்கும் ஆப்கானை அழித்தொழிக்கும் படலத்தை ஆரம்பித்துள்ளது.

உலகநீதி- மனிதஉரிமை -சிறுவர் பாதுகாப்பு என்றெல்லாம் குரல் கொடுக்கும் சர்வதேச பொது அமைப்புகள், அமெரிக்காவின் செயலைக் கண்டிக்காதது அவ்வமைப்பின் மீதான நம்பிக்கையை வலுவிழக்கச் செய்துள்ளது.

அநீதி இடம்பெறும் போதெல்லாம் அது எவரால்- எத்தேசத்தால், எந்த இனத்தால் நடந்துள்ளதென்பதை நோக்காது, பொது நோக்கில் நின்று, அதனைக்கண்டிப்பதே முறை. ஆனால், ஆப்கான் மீதான அமெரிக்காவின் முறையற்றதாக்குதல்களுக்கு உலக நாடுகள் முண்டு கொடுக்கின்றனவேயொழிய அதனைத் தடுத்து ஓர் சமரசத்தை ஏற்படுத்த எந்த நாடும் முன்வரவில்லை,

சமரசம்- சமத்துவம்- சோஷலிசம் என்பதெல்லாம் வெறும் வாய்ப்பேச்சென்பதும், உலகை முதலாளித்துவவாதிகளே ஆட்டிப் படைக்கிறார்களென்பதும், ஆப்கான் மீதான தாக்குதல்களின் போது உலக நாடுகள் காட்டும் மௌனம் தெளிவுபடுத்துகின்றது.

எதுவாயினும் அமெரிக்கா ஆப்கான் மீது வெற்றிகரமாகத் தாக்குதலை நடத்தினாலும், இனிவருங் காலங்களில் அமெரிக்க மக்களுக்கு உறக்கம் குறைவாகவே இருக்கும் என்பது உறுதியாகி விட்டது.

# கூடுதல் இரசாயனப் பசளைப் பிரயோகம்

# சூழலில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்

**ச. சின்னத்துரை**
உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்)
யாழ்ப்பாணம்.

ஒரு குறிப்பிட்ட விளை நிலததிலிருந்து கூடிய பயிர் உற்பத்தியைப் பெறுவதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய வெவ்வேறு தொழில்நுட்ப முறைகளுள் பசளைப்பிரயோகமும் ஒன்றாகும். தாவரம் ஆரோக்கியமாக வளர்ந்து தரமுள்ள கூடிய விளை பொருட்களைத் தருவதற்கு இயற்கைப் பசளையுடன் சிபார்சு செய்யப்பட்ட அளவில் இரசாயனப் பசளையையும் உபயோகித்தல் அவசியமானதாகும்.

### இரசாயனப் பசளை

ஆரம்ப காலத்தில் விவசாயிகள் கூடியளவில் இயற்கைப் பசளைகளை மாத்திரம் பாவித்துப் பயிர் செய்தனர். சனத்தொகை அதிகரிக்கத் தொடங்க உணவுத் தேவையும் அதிகரித்தது. இதனால் பண்டைய விவசாய முறைகளைக் குறைத்து நவீன விவசாயத் தொழில் நுட்பங்களைப் பாவித்து அதிக உற்பத்தியைப் பெறுவதற்கு ஆரம்பித்தனர். இரசாயனப் பசளைப் பிரயோகமும் நவீன விவசாயத் தொழில்நுட்பங்களில் ஒன்றாகும்.

விவசாயத் திணைக்களம் பயிர் உற்பத்தியை அதிகரிப்பதற்காக நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம் போன்ற பிரதான மூலகங்கள் உள்ளடங்கலாக சமச்சீர்ப் பசளைப் பிரயோகத்தின் முக்கியத்துவத்தை முன்வைப்பதுடன், வெவ்வேறு பயிர்களுக்குத் தேவையான இந்த இரசாயனப் பசளைகளையும், அவைகள் இடப்படவேண்டிய காலங்களையும் சிபார்சு செய்து வந்துள்ளது. தொடர்ந்தும் சிபார்சு செய்து வருகின்றது.

### பாதிப்பு

இரசாயனப்பசளையை உபயோகிக்க ஆரம்பித்த விவசாயிகள் குறிப்பிட்ட சிபார்சு செய்யப்பட்ட அளவிற்கு அதிகமாகவும், சமச்சீரற்ற முறையிலும் பாவித்ததால் மண்ணும், நீரும், பயிர்களும் பாதிப்படைந்து வந்துள்ளன. தொடர்ந்தும் இந்த இரசாயன உரங்களைக் கூடுதலாக உபயோகிப்போமானால் நம் இயற்கை வளங்கள் எல்லாம் பாதிப்படைந்து சூழலில் பாதகமான விளைவுகள் ஏற்படும். கூடுதலான இரசாயன உரங்களின்பாவனை பின்வரும் முறைகளில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றது;

(1) பயிருக்கு ஏற்ற சமச்சீர்ப் பசளைப் பிரயோகம் செய்யாவிடின் குறைவாக உள்ள மூலகம் பயிர் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதன் மூலம் உற்பத்தியைக் குறைக்கின்றது.

(2) நைதரசன் பசளையை (அமோனியம் சல்பேற் அல்லது யூறியா) கூடுதலாகப் பாவித்ததால் பயிர்களின் பதிய வளர்ச்சி கூடுதலாக நடைபெறுவதுடன், பீடை நோய்களின் தாக்கங்களும அதிகரிப்பதுடன் உற்பத்தியும் குறைகின்றது.

(3) நைதரசன் பசளையை அளவுக்கு மேலதிகமாகப் பாவிக்கும்போது மேலதிக பசளை நீரில் கரைந்து தரைக்கீழ் நீருடன் கலப்பதனால் குடிநீர் மாசடைகின்றது. நைதரேற் நச்சுத்தன்மையால் புற்றுநோய் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன;

(4) அமோனியம் சல்பேற்றைக் கூடுதலாகப் பாவிக்கும் போது நிலம் அமிலத் தன்மையாக மாறுகின்றது.

(5) நீர் வடிப்புத்தன்மை குறைவாக உள்ள உவர் நிலங்களில் கூடிய இரசாயனப் பசளைகளைப் பாவிக்கும்போது உவர்த்தன்மை மேலும் அதிகரிக்கின்றது;

(6) மண்ணை வளமாக வைத்திருக்க உதவி செய்கின்ற மண்ணில் வாழுகின்ற பக்ரீறியா, பங்கஸ், அல்கா போன்ற நுண்ணங்கிகள் கூடிய இரசாயனப் பசளைப் பிரயோகத்தால் குறைக்கப்படுகின்றன. சில வேளைகளில் சாகடிக்கப்படுகின்றன.

(7) மண் புழுக்கள் மண்ணை வளமாக்குகின்றன. கூடிய இரசாயன உரப்பாவனையால் இவைகளின் எண்ணிக்கை மிகக் குறைகின்றது.

மேற்குறிப்பிட்ட தாக்கங்களைக் குறைத்து பயிர் உற்பத்தியை அதிகரிக்கக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளாவன;

(1) மண்வளத்தைப் பேணிப் பாதுகாத்துத் தொடர்ச்சியாகப் பயிர்களிலிருந்து கூடிய உற்பத்தியைப் பெறுவதற்குக் கூடியளவில் இயற்கைப் பசளைகளான எருவகைகள், கூட்டெரு, பசுந்தாட் பசளை போன்றவற்றை மண்ணுடன் சேர்த்தல் வேண்டும். ஒரு ஏக்கருக்கு 8-10 தொன் (20வண்டில்) இயற்கைப் பசளையை வருடா வருடம் இடுதல் வேண்டும்.

(2) சமச்சீர் இரசாயன உரப்பாவனையை விவசாயத் திணைக்களம் சிபார்சு செய்யும் அளவில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(3) ஒருங்கிணைந்தபசளைப் பிரயோக முகாமைத்துவத்துடன் நீர் முகாமைத்துவத்தையும் கடைப்பிடித்தல் வேண்டும்;

பாடசாலை மாணவர்களுக்கான

# 42,606 பாடப் புத்தகங்கள் இன்னமும் வழங்கப்படவில்லை

## அரசசார்பற்ற நிறுவன அறிக்கையில் சுட்டிக்காட்டு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில்தரம் ஒன்றில் இருந்து தரம் பதினொன்று வரையும் கல்வி பயில்கின்றபாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பாடப் புத்தகங்களில் இன்னமும் 42ஆயிரத்து 606 புத்தகங்கள் வழங்கப்படவில்லை என யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: தரம் ஒன்றில் பயில்கின்ற மாணவர்களுக்கு ஆயிரத்து 364 புத்தகங்களும், தரம் இரண்டு மாணவர்களுக்கு ஆயிரத்து 500ம் தரம் மூன்று மாணவர்களுக்கு 982ம் தரம் நான்கு மாணவர்களுக்கு 284ம் தரம் ஐந்து மாணவர்களுக்கு 110ம்தாம் ஆறுமாணவர்லளுக்கு 7ஆயிரத்து715ம், ததரம ஏழு மாணவர்களுக்கு 9ஆயிரத்து 956ம்,தரம் எட்டு மாணவர்களுக்கு 6ஆயிரத்து 296ம்,தரம் ஒன்பது மாணவர்களுக்கு ஆயிரத்து 649ம், தரம் பத்து மாணவர்களுக்கு 6ஆயிரத்து550ம் தரம் பதினொன்று மாணவர்களுக்கு6ஆயிரத்து507புத்தகங்களும்வழங்கப்படவில்லை.

இவற்றுள் இந்து சமயம், கிறீஸ்தவம், தமிழ், தமிழ் இலக்கியம்,ஆங்கிலம், தூய கணிதம், விஞ்ஞானமும் தொழிநுட்பமும், சமூகக்கல்வியும் வரலாறும், சுகாதாரமும் உடற்கல்வியும்,போன்ற பாடநூல்கள் உள்ளடங்கியுள்ளனர். (உ-77)

## சீட்கோ விதைவிநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டு விதை உற்பத்தியாளர் சங்கம் நடத்தும் 'சீட்கோ'விதை விநியோக ஆரம்பவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமைமு.ப 10 30மணிக்குதிருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (செ-9-19)

## குடாநாட்டிற்கான பொருட்கள் இறக்கப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வந்தடைந்த இந்துருவலி,கோமாரி, ஹெந்தல ஆகிய கப்பல்களில்ரவை, மா, கோதுமைமா, ஆட்டமா மற்றும் நிவாரணத்துக்கான பருப்பு உட்பட தனியார்களுக்கான பொருட்கள் பலவும் இறக்கப்பட்டுவருவதார் யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன;

225 மெற்றிக் தொன் பருப்பு, 100 மெற்றிக் தொன் நெஸ்பிறே என்பன இதில் அடங்கும் எனவும்,

பொல் ஹொட கப்பல், தனியார்களுக்கான பொருட்களை ஏற்றிக்கொண்டு விரைவில் வந்து சேரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது: (உ-110)

## அனலைதீவில் நடமாடும் சேவை

அனலைதீவு மக்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் அவர்களது இடத்திலேயே வைத்து உடனடியாகத் தீர்க்கும் சேவையாக ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் நாடமாடும்சேவையினை நாளை மறுதினம் அனலைதீவில் நடத்தவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே எக்ஸ்: செல்வநாயகம் தலைமையில் காலை 10 00 மணிக்கு ஆரம்பமாகி இச்சேவை நடைபெறும் என்பதுகுறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே திருமணமான 30 சோடிகளுக்கு திருமணப் பதிவுகள் இடம்பெறவுள்ளன; (உ-75)

## சக்கர நாற்காலி திருத்தம்

(மந்திகை)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் சமூக சேவைத் திணைக்களத்தினால் வலுவிழந்தோருக்கு வழங்கப் பட்ட முச்சக்கர வண்டிகள்சக்கர நாற்காலிகள் ஆகியன திருத்தப்படவுள்ளதாகப்பிரதேச செயலர் ஆ சிவசுவாமி தெரிவித்துள்ளர்.

யூஎன்ஹஎச்.சி ஆர் நுண்காருத்திட்டத்தின் கீழ்ஜெய்ப்பூர் நிறுவனத்தினால் இத்திருக்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேற்படி பிரதேச செயலர் பிரிவில்உள்ளவலுவிழந்தோர் தமது சேதமடைந்த சக்கர நாற்காலி, முச்சக்கர வண்டி ஆகியனவற்றை திருத்துவதற்கு,பிரதேச செயலக சமூக சேவைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்; [செ-23

## தினசரி தியானம்

### சகித்தல்

காக்க பொருளா அடக்கத்தை
ஆக்கம் அதனினூங்கு இல்லை உயிர்க்கு

திருக்குறள்

பரிபூரணானந்தமே, உன்னில் நான் திளைத்திருக்குங்கால் உலக வாழ்வு உண்டுபண்ணும் துன்பத்தைச் சகிக்கும் திறன் தானே வந்துவிடுகிறது;

மண்ணுலகில் பிறப்பெடுத்திருப்பவர்களுக்குத் துன்பத்துக்கு மேல் துன்பம் வந்து கொண்டேயிருக்கும் அவைகளைப்பொறுத்துக் கொள்ளுமளவு மனது உறுதி பெறுகிறது; துன்பத்தில் தளர்வுறு மளவு மனவலிவு குறைகிறது; உறுதியான உள்ளம் படைத்துத் துன்பத்தைப் பொருள் படுத்தாதிருப்பது திதிக்ஷை.

- ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்.

# நிவாரண அரிசி விவகாரம் மானிப்பாய் ப.நோ.கூ.ச தலைவர் முற்றாக மறுப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நிவாரணத்திற்காக வழங்கப்பட்ட 188 அரிசிமூடைகள் தனியார் கடைகளிலிருந்து மானிப்பாய் பிரதேசசபைத் தலைவரின் தலைமையில் சென்ற குழுவினால் கைப்பற்றப்பட்டதாக கடந்த 14ந் திகதி வலம்புரியில் வெளிவந்த செய்தியை மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் மா.செல்வராசா மறுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலரினால் வழங்கப்படும் நிவாரண முத்திரைக்கும், பட்டியலுக்கும் மட்டுமே பொருட்கள் விநியோகித்து வருவதாகவும், கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் அரிசிக்கும், தமது சங்கத்திற்கும் எதுவிததொடர்பும் இல்லை என்றும் தெரிவித்துள்ள்ளார்.

இதேவேளை கைப்பற்றப்பட்ட அரிசி தொடர்பான செய்தி குறித்து தான் மேற்கொண்ட பரிசோதனைகளின் போது, மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளிலிருந்து குறித்த அரிசி மூடைகள் வெளிச் செல்லவில்லையென்பதை உறுதிப்படுத்திக் கொண்டதாக யாழ்ப்பாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கு. சண்முகநாதன் விடுத்த செய்திக் குறிப்பொன்றில் உறுதிப் படுத்தியுள்ளார். [ந]

## மின் தாக்கி காயம்

[யாழ்ப்பாணம்]

யாழ் ரெலிக் கொம் ஊழியர் ஒருவர் மின்சாரம் தாக்கிக் காயமடைந்த நிலையில் யாழ் போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

உரும்பிராய்ப்பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் மயிலணி வடக்கு சுன்னாகத்தைச் சேர்ந்த எம் ரமேஸ் குமார் (வயது-24] என்பவரே காயமடைந்தவராவார்.

வாகனத்தில் பொருத்தப் பட்ட ஏணியின் உதவியுடன் மின் கம்பத்தில் ஏறி தொலைபேசி தொடர்வைப் பழுது பார்த்த வேளை ஏணிதவறி வீழ்ந்த போது மின் தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது. [ந-10]

## வவுனியாவில் பாதுகாப்புதீவிரம்

[வவுனியா)

டிசம்பர்மாதம் 5ம்திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை அடுத்து வவுனியா மாவட்டத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது,

இன்றிலிருந்து 27ம்திகதி வரைவவுனியா செயலகத்தில் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட விருப்பதால் வவுனியா செயலகம் பலத்த பாதுகாப்புக்கு உட்படுத்தப் பட்டுள்ளது.

தேவைஇன்றி எவரும் வவுனியாசெயலகத்திற்கு செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்றுமுதல் வழமைக்கு மாறாகபாதுகாப்பு நடவடிக்கைமுடுக்கி விடப்பட்டு தீவிர சோதனை நடவடிக்கைகளும்மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது,

இதேவேளை இன்றிலிருந்து 27ம்திகதிவரை அரசியல்கட்சிகள் ஊர்வலங்கள் நடத்துவது தடைசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது (வ5]

## அமெரிக்க

கொழும்பிலுள்ள அவுஸ்ரேலிய தூதரத்திற்கு கிடைத்த கடிதத்தை தாம் கைப்பற்றி மருத்துவ ஆய்வுக்கு அனுப்பியுளளதாகவும், ஆய்வின் பின்னரே அவை ''அந்திராக்ஸ்'' கிருமிகளா எனக் கண்டுபிடிக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

இரு தூதரங்களுக்குமான மருத்துவ ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள் விஜயம் செய்து சந்தேகத்திற்குரிய கடிதங்கள்உள்ளனவாஎனஆராய்ச்சி செய்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)

## வன்னியில்

செந்தில்நாதனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஈ.பி.ஆர்.எல் எவ் (சுரேஷ் அணி) சார்பில் சிவசக்தி ஆனந்தன் போட்டியிடவுள்ளார்.

இதேவேளை நான்கு கட்சி கூட்டணியினரும் தேர்தல் பிரசார வேலைகளுக்கு ஒவ்வொரு கட்சியிலிருந்தும் தலாஇரண்டுபேரைத் தெரிவு செய்துள்ளனர். (வ)

## கனேடியத்

களின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனைச் சந்தித்து கலந்துரையாடியமை தொடர்பாக வெளிவிவகார அமைச்சு கடுமையான கண்டனம் தெரிவித்திருந்தது.

இவரது செயற்பாடுகள் தொடர்பாக ஏற்கனவே அதிருப்தியுற்றிருந்த அரசாங்கம் டெய்லி மிரர் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியினைத் துரும்பாகப் பயன்படுத்தி இவர் மீது குற்றம் சுமத்தி கனேடிய அரசாங்கத்திடம் முறையிட்டுள்ளது (ந-5)

## எம். எஸ்.

மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதை முக்கிய நோக்காகக் கொண்டு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையகமக்கள் முன்னணி, தேசிய தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன ஒன்றிணைந்து ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட முன்வந்திருப்பதை மலையகத்தின் பல்வேறு அமைப்புக்களும் வரவேற்றுள்ளன.

இதேவேளை ஒன்று பட்ட மலையகத் தமிழ்த் தலைவர்கள் இன்று ஐக்கிய தேசியக் கட்சித்தலைவர் ரணில் விக்கிரம சிங்கவைச் சந்தித்து எதிர் வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதுதொடர்பாக கலந்துரையாடவுள்ளனர். (வ)

# சுற்றுநிருபம் அனுப்பி வைப்பு

(மானிப்பாய்)

அரசாங்க ஊழியர்களுக்கு இம் மாதம் முதல் வழங்கப்படவுள்ள ஆயிரத்து200ரூபா இடைக்கால சம்பள உயர்வு தொடர்பான சுற்று நிருபம் யாழ் செயலகத்திற்கும் மற்றும் பிரதேச செயலகங்களுக்கும் பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (உ-120)

## கலாசாலையில் வாணிவிழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை சைவ மாணவர் மன்றம் எதிர்வரும் 26ஆம் திகதி விஜயதசமி தினத்தன்று வாணி விழாவை கலாசாலையில் நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

பட்டிமன்றம், பேச்சு,கலை நிகழ்ச்சிகள் முதலியன இவ் விழாவில்இடம்பெறவுள்ளன (எ-19, 9)

# பாராளுமன்ற உறுப்பினருக்கு 5வருட சிறைத் தண்டனை

(பாரிஸ்)

பாலியல் வல்லுறவு குற்றச் சாட்டுத்தொடர்பாக பிரான்சின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு 5வருட சிறைத் தண்டனை வழங்கப் பட்டுள்ளது.

தனது மருமகளை பலதடவைகள் வல்லுறவிற்கு உட்படுத்திய மாக்து மோவின் (வயது-51) என்ற நாடாளுமன்றஉறுப்பினருக்கே தண்டனைவழங்கப் பட்டது.

இவர்தன் மீதான குற்றச் சாட்டை மறுத்த போதும் குற்றம் நிருபிக்கப் பட்டது. இதேவேளை பிரான்சின் 43வருட குடியரசு வரலாற்றில் பாலியல் வல்லுறவு குற்றச் சாட்டுத் தொடர்பாகநாடாளுமன்றஉறுப்பினர் ஒருவர் நீதிமன்றத்தினால் தண்டனை பெற்றது இதுவே முதல் சம்பவமாகும். (உ-5)

# வேட்பு மனுத்தாக்கல் இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்வது இன்று காலை முதல் ஆரம்பமாகவுள்ளது.

இருபத்திரண்டு தேர்தல் மாவட்டங்களிலுள்ள செயலகங்களில் இவ் வேட்புமனுத் தாக்கல் செய்வது இன்று ஆரம்பிக்கப்பட்டு இம் மாதம் 27ம் திகதிவரைஏற்றுக்கொள்ளப் படும்.

இதனையொட்டிஒவ்வொரு செயலகங்களிலும் 50பொலிசார் வீதம் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுவர்.

இதேவேளை வடக்குக் கிழக்கில் தேர்தல் பாதுகாப்பிற்காக இராணுவத்தினரும் ஈடுபடுத்தப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)


# அறிவித்தல்

## வடக்கின், அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு

## பனை அபிவிருத்தி சபை

## சீவல்தொழிலாளர்களுக்கான ஆயுள்காப்புறுதிதிட்டம்

யாழ் குடாநாட்டில் சீவல் தொழிலில் ஈடுபடும் ஊழியர்கள் எதிர்நோக்கக் கூடிய விபத்துக்களையும் உயிர் இழப்புக்களையும் ஈடுசெய்யும் வகையில் வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் ஆயுள் காப்புறுதித் திட்டம் ஒன்றை பனை அபிவிருத்திச் சபையினால் ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது,

இதன் பொருட்டு இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் பின்வரும் விபரங்களை தாம் அங்கத்துவம் வகிக்கும் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 26-10-2001ம் திகதிக்கு முன்னர் பனை அபிவிருத்திச் சபை பொது முகாமையாளரிடம் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கும் வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

1 முழுப்பெயர் :-
2 விலாசம் :-
3 பிறந்த திகதி :-
4 அடையாள அட்டை இல:-
5 அங்கத்துவம் வகிக்கும் சங்கத்தின் பெயர்:-
6 அங்கத்துவ இலக்கம் :

**நா. சந்திரமோகன்**
நிறைவேற்றுப் பணிப்பாளர்
பனை அபிவிருத்திச் சபை

குறிப்பு: இது தொடர்பாக மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள விரும்பும் தொழிலாளர்களோ அவர்கள் சார்ந்த சங்கங்களோ கண்டி வீதியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபைத் தலைமையகத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி இல, யாழ்:021-2034
கொழும்பு காரியாலயம்: 589185, 586820

(கி-2760)



★ உன்னத கலை நயம் மிக்க தங்க நகைகளுக்கு...

# நியூ ராதிகாஸ் நகை மாளிகை

189, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி 2212)


இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு அக்டோபர் மாதம் -20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.